# ஞானபோதினி.

புத்தகம் III. } 1900ஸ்ரீ ஜூலைமீ 20உ {நெ. 12.

## *பாரதஸாரம்.

### I-அத்தியாயம்.

### முகவுரை.

வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் என்னும் பெரியநூற்பிரிவில், பாரதம் இராமாயண மென்னு மிரண்டும் இதிகாசத்துளடங்கும். ஆகவே பாரதமும் உலகத்திலுள்ள அரியபெரிய கிரந்தங்களுள் ஒன்றாகும். † "பாரதஃபஞ்சமோவேதஃ" என்று இதை வேதத்தோடுசேர்த்து ஐந்தாவது வேதமென வழங்குதலினாலும் இதனுடைய பெருமை நன்குவிளங்கும். இதைச்சற்றேனும் ஆய்ந்தறியாது இக்காலத்தவரிற் சிலர் இதனுடைய பெருமையைக்குறைக்க வெண்ணுதல் அறியாமையேயாம். இதனை வாசிக்கப்புகுவோர் வெறுப்பென்பதை யொழித்து மேலானவர்களாற் செய்யப்பட்ட நூலாதல்பற்றி அதற்குரிய கௌரவமும் வைத்து அதிக ஊக்கத்துடனும் விருப்பத்துடனும் அதனை அனுகினாலொழிய அதிற்பொதிந்திருக்கும் உண்மைகள்யாவும் எளிதிற் புலப்படா. யாதேனுமொரு பொருளின் சிறப்பை நன்கறியவேண்டுமாயின், நமதுகண்கொண்டு அதை நன்றாய்ப்பார்த்தல் வேண்டுமல்லவா? கண்ணை மூடிக்கொண்டிருந்தால்பொருளின்னதென எப்படி அறிதல்கூடும்? அதுபோலவே நூல் நுவலும்பொருளையும் நன்கறியவேண்டுமாயின் மனக்கண்ணையும் நன்றாய்த் திறந்துபார்த்தால்தான் பொருள் நன்குபுலப்படும். ஒருவன் தன் மனது வெறுப்பெனும்வழிஒழித்து விருப்பெனும் நெறிப்பட்டவுடன்

---

* Adapted from Mrs. Annie Beasant's—"Mahabharata."

† भारतः पञ्चमो वेदः । 𑌭𑌾𑌰𑌤𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌵𑍇𑌦𑌃 ।

இந்நூலை எவ்வாறு வாசித்தல் தக்கதெனப் பார்த்தல்வேண்டும். இந்நூலின் பிரிவாகிய பதினெண் பருவங்கள் ஒவ்வொன்றி லுமிருக்கும் முக்கிய விஷயங்களைத் திரட்டிப்பார்ப்போம். அதாவது இந்நூலி லடங்கியுள்ளன யாவை? இந்நூல் போதிக்கும் நீதிகள்யாவை? இதிற் சொல்லப்படும் பல்வகைஜனங்களின் நடையுடைபாவனைகள் யாவை? அவர்கள் செய்தனவும் செய்முயன்றனவும் யாவை? தேவர்கள் அவர்களுக்கு எச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு உதவிசெய்து கொண்டுவந்தனர்? எவ்வாறு இடையூறியற்றிக்கொண்டு வந்தனர்? இவற்றையெல்லாம் நன்காராய்தல் வேண்டும்.

அக்காலத்தில் தேவர்களும், தேவதைகளும் தாம் நேரே வந்து மானிடர்களுக்கு உதவி புரிந்து போயினர் என்று சொல்வது இக்காலத்திற் சிலர்க்குப் பரிகசிக்கத்தக்கதெனத்தோன்றும். அதற்குக்காரணம் அன்னோர்க்குத் தம்மதத்தினுண்மை சிறிதேனுந் தெரியாமையே யன்றி வேறில்லை. இந்துசமயத்தவர்களே இப்படியிருப்பார்களாயின் மற்றுப்புறச் சமயத்தவர்கள் அறிவின்மையாலும் அழுக்காற்றாலும் தாம்வேண்டியவாறு பிதற்றுதலுக்கோர் அளவுமுண்டாகுமோ?

எவ்விதமாக உற்றுப் பார்க்கினும் பாரதம் பெருமையுடையதாகவே காணப்படுகிறது. காவியமாக எடுத்து நோக்கினும் அதற்குரிய உறுப்புக்களெல்லாம் பொருந்திப்பொலிந்து விளங்குகின்றது. ஒவ்வொரு ஜாதியாரிடத்தும் பலநூல்களுள்ளன. சில ஜாதியாரிடத்தில் இவை அதிகமாகவும் வேறுசிலரிடத்தில் கொஞ்சமாகவு மிருக்கின்றன. இவர்களிடத்தில் காவியங்களும், சரித்திரங்களும், சாதாரண கதைகளும், தத்துவம், மதம் இவைகளைக்குறித்த நூல்களுமுள. சிறந்த ஜாதியாரென்று உலகத்தோரால் நன்கு மதிக்கப்படுவதும், குறைந்த ஜாதியாரென்று சொல்லி யிகழப்படுவதும், அநேகமாய் அந்தந்த ஜாதியிலுள்ளோராற் செய்யப்பட்டுத் தொன்றுதொட்டு வழங்கிவரும் அருமையான நூல்களின் குணத்தாலு மினத்தாலுமேயன்றி வேறில்லை. ஆய்ந்து பார்க்குமளவில் இந்தியர்களிடமிருக்கும் கிரந்தத்தைப் பார்க்கினும் சிறப்புடையன வேறொரு ஜாதியாரிடத்தும் இல்லையென உறுதியாய்ச் சொல்லவியலும்.

கிரீக்ஜாதியாருடைய சரித்திரத்தில் பத்து வருஷத்து * யுத்தத்தைக்குறித்து, எவற்றையும்வெகு விநோதமாயெடுத்துச்சொல்வதில் வான்மீகி, வியாசர் இவர்களுக்குச் சமானமான † ஹோமர் என்னும் கவிசெய்த காவியத்தையும், இன்னும் தத்துவங்கள், சரித்திரங்கள் முதலியனவற்றைக் குறித்தெழுதியிருக்கும் பெரியவர்களைப்பற்றியும் அவர் செய்த நூல்களிற் சிலவற்றையும் நம்மவரிற் சிலர்கற்றும்கேட்டுமிருக்கின்றார்கள். அவர்களாற்செய்யப்பட்டகிரந்தங்களைவாசிப்பவர்கள், மிகவும்சிறந்தகாவியங்கள்செய்யுந்திறமையுடைய கவிகளும், தத்துவ சாஸ்திரிகளு மிருந்திருக்கிறபடியால் ‡ கிரீஸ் என்னும் தேசமானது அக்காலத்துஎவ்வளவுசிறப்புற்றிருத்தல்வேண்டுமென்று ஆச்சரியத்துடன் வினவுகின்றார்கள். மேனாட்டிலுள்ளவர்களுக்குக் கொஞ்சக்காலத்திற்குமுன்புதான் சம்ஸ்கிருதபாஷையின் பரிமளவாடை யடித்தது. அதன் பின் அவர்களிற் சிலர் அதன்வாசனை நன்குணர்ந்து, அதிலுள்ள சிறந்தநூல்கள் சிலவற்றைக்கற்றறிந்து, இத்தகையநூல்களைச்செய்த இந்தியர்கள் அக்காலத்து மிகவும் சிறந்த நிலைமையிற்றா னிருந்திருத்தல் வேண்டுமென ஊகித்து இவர்களைப்பற்றி விசேஷித்துச் சொல்லத்தொடங்கினார்கள். மஹாபாரதம் உலகத்திலுள்ள எல்லாக்கிரந்தங்களினும் மிகவும்சிறப்புள்ளது. மற்றைப் புத்தகங்களுள் ஒன்றேனும்நாமறிய விரும்பும் விஷயங்களனைத்தையும், நமக்குறுதி பயத்தற்குரிய அருமையான விஷயங்களையும் ஒருங்கே பொருந்தினதன்று. பாரதத்தின் பாஷை நடையோ மிகவுஞ்சிறந்தது. அதிற் சொல்லப்பட்ட கதைகளோ அதனினும் சிறந்தன. ஆகையால் நம்முன்னோருடைய பிரயோஜனத்தை நாடியும் நம்பிரயோஜனத்தைக் கருதியும் நம்முன்னோராற் செய்யப்பட்டுள்ள இப்பெரிய நூலுள் ஒருசிறு பாகத்தையேனும் நம்மவர்கள் கற்றுக்கேட்டுத் தெளியாதிருத்தல் மிகவு மாச்சரியமான விஷயம்.

இதனருமையும் பெருமையும் முக்கியமாய் மூன்று விஷயங்களிலடங்கியுள்ளன. அவையாவன:— (1) அதிலுள்ளநீதிகள். (2) அது போதிக்கும் தத்துவம். (3) அதிலடங்கியுள்ள சரித்திரம்.

(1) நன்னடக்கை யின்னதெனவும் அதற்குரிய விதிகளின்னவெனவு மெடுத்துச்சொல்வது நீதியின்பாற்படும். சணக்குக் கற்பாரொருவனுக்கு அதற்குரிய விதிகளும் கொடுத்திருக்கிறபடி

* Trojan war. † Homer. ‡ Greece,

யால் அவற்றைக்கொண்டு கணக்குக்களையும் தப்பிதமின்றிப் பூர்த்திசெய்கிறான். நடக்கையும் இது விஷயத்தில் கணக்கைப்போன்றதுதான். இதற்கும் விதிக ளுள்ளன. அவற்றைக்கைப்பற்றினால்தான் நல்வழியில் நடத்தல்கூடும். நீதிசாஸ்திரமானது ஒருவனைப் பார்த்து "நீ நல்வழியில் நட, துன்மார்கத்திற் செல்லாதே" என்று சொல்லுகிறதில்லை. ஆனால், நல்லதின்னதென்பதும் கெட்டதின்னதென்பதும், ஒருவன் செய்யத்தகுவன இன்னவென்பதும், செய்யாதொழிக்கத்தக்கன இன்னவென்பதும் அது எடுத்துக்கூறுகின்றது.

மகாபாரதம், நாமெப்படி நடத்தல் வேண்டுமென்பதை எடுத்துக்காட்டி நன்னெறியை நன்றாய்ப்போதிக்கும் குருவைப்போன்றுளது. இளஞ்சிறார்க்கேயன்றி வயதின் முதிர்ந்தோர்க்கும் அறிவு புகட்டுகின்றது. குழந்தை, புதல்வன், புதல்வி, ஆண், பெண், என்னும் இவர்கள் தங்கள் நிலைமையில் செய்யவேண்டுவன வற்றை எடுத்துரைக்கின்றது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தாரும் இவற்றிற் சேராத பஞ்சமர்களும் நாடோறும் நடந்துகொண்டு வரவேண்டிய மார்க்கங்களும் அதில்விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. வாணிகத்தைத் தனக்குத் தொழிலாகக் கொண்டானொருவன் நடக்கவேண்டிய மார்க்கங்களும் விளக்கப்பட்டுள. குடும்பத்திலுள்ள ஸ்திரி, புருஷர்; மகன், தந்தை; தாய், மகள்; இவர்கள் ஒருவர்க்கொருவர் நடக்கவேண்டுமாதிரியும் அதில் நடத்திக்காட்டியுளது. ஒவ்வொருநாளும் உலகவாழ்க்கையில் சாதாரணமாய் நிகழும் விஷயங்களும் விரிவாயும் சாதுரியமாயும் கதாரூபமாகக் காட்டப்பட்டுள்ளன.

அஃதெப்படியெனின் ஒருவனைப்பார்த்து நீ "வாய்மையே வழங்கல்வேண்டும்" என்று சொல்வதற்குப்பதிலாக, அரிச்சந்திரனைப்போன்று சத்தியத்தில் நின்றவர்களைப்பற்றியும் அதனால் அவர்களுக்கு வந்தநற்கதியைக்குறித்தும் வற்புறுத்துகின்ற அநேக கதைகள் சொல்லப்பட்டுள்ளன. "நீ பொய்சொல்ல லாகாது" என்று சொல்லுவதற்குப் பதிலாகப்பொய்சொன்னவர்களுக்குநிகழ்ந்த துன்பங்களை எடுத்துக்காட்டும் கதைகளும் அதில் அநேகம் பொதிந்துள்ளன. இதில் இதைப்போன்ற பற்பலநீதிகளைத் தெரிக்கும் கதைகள் இன்னும் பலவுள. நன்னடக்கையின் விதிகள் இவையெனவும், அவைகளை அனுட்டிக்குமாறு இன்னவெனவும்

பாரதம் நன்கு புலப்படுத்துகின்றது. நன்னடைக்குரிய விதிகளை மாத்திரம் எடுத்தெழுதியிருப்பின் அதனுண்மை அவ்வளவு நன்ருய்விளங்குவதரிது. அதைப்பார்ப்பவரிற்பலர்,

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்" என்னுந்தேவர்குறளை ஒருவாறு நோக்கி, சொல்லுதல் சுலபம் நடத்தல்கஷ்டமெனச் சொல்லிப் போவார்களேயன்றி அவ்வாறு நடக்க முயலார். அத்தகையர்களுக்கு அந்தந்த விதிகளைத் தாம் தம் வாழ்நாளில் நடந்து காட்டியவர்களின் சரித்திரங்களையு முரைத்து விதிகளையும் எடுத்துக்காட்டினல் அவர்கள் அவ்விதிகளை முன்னிலும் நன்குகிரகிப்பதுமன்றி நடக்கவு முயல்வார்கள்.

அறிவிலார் சிலர் நினைப்பதுபோலன்றி, ஒருவன்றன் நன்னடை தனக்கும் பிறர்க்கும் அத்தியாவசியக மானது. ஜயாபஜயமும், சுகதுக்கமும், ஐசுவரியமும் ஒருவனுக்கு நடையால்வருவன. இதைக் குறித்து ஒரு கதையுமுண்டு. பிரஹ்லாதன் தன் நன்னடையின் பலனுக ஒருகாலத்துத்திரிலோகசாம்பிராஜ்ஜியத்தையுமடைந்திருந்தான். அப்போது இந்திரன் ஒரு வேதிய வேடங்கொண்டு அவனிடம்சென்று அவன் சீடனுகஅநேகநாளிருந்து அவனுக்கு அதிகபிரீதிவருமாறு ஒழுகிக்கொண்டு வந்தான். ஒருநாள் தனது சீடனிடத்து அதிக விசுவாசம் பிறக்கவே அவனை அழைத்து உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் நான்தருகின்றே னென்ன, இந்திரனும் உன் நன்னடையை யான் விரும்புகிறேனென்ருன். பிரஹ்லாதன் என் செய்வானினி! தன்னுடைய பிரதானமான இக்குணத்தைத்தானஞ்செய்து விடுவதனுல் யாது விளையுமோ என்னு மச்சமுடையவனுயிருந்த போதிலும் தான் வாக்களித்துவிட்டபடியால் வேருென்றுஞ் செய்வதற்கில்லாது தடையின்றிக்கொடுத்தேனென்ருன். நிகழ்ந்ததைக்குறித்துப்பிரஹ்லாதன் மனக்கவலையுற்றுயோசித்துக் கொண்டிருக்கு மளவில் அவன் தன் தேகத்தினின்றும் ஒருஜோதி அருநிழ லுருவத்தோடு வெளிப்போந்தது. அதைப்பார்த்து பிரஹ்லாதன் நீயாரென்ன, அஜ்ஜோதியானது நான் உன் நன்னடையின் ஸாராம்சம், நீ என்னை எறிந்து விட்டாயாதலின் உன்னைவிட்டுப் பிரிந்தேகுகின்றேன், உன்றன் சீடனுகிய அப்பிராமணனிடத்து வாசஞ்செய்யப் போகின்றேன் என்றது.

அதன்பிறகு வேறொரு ரூபம் முன் மாதிரியாகவே வெளித்தோன்றியது. அதை யாரென வினவியபோது அது, நான் நேர்மை என்னும் பெயர் பெற்றவன் எப்போதும் நடையோடு குடிகொண்டிருப்பவன். அஃதுன்னை விட்டேகவேயானும் புறப்பட வேண்டியிருக்கிறது என்று சொல்லிப்போய்விட்டது. இம்மாதிரியாகவே அவனிடம் குடிகொண்டிருந்த வாய்மை, பொறுமை, வீரம் முதலிய சகலகுணங்களும் சென்று விட்டன. ஐசுவரியம் அவனை விட்டுப்பிரியும்போது அவனை நோக்கி "ஓ பிரஹ்லாதா! உன் குணத்தினால் மூன்றுலகினையு முனக்குட்படுத்தி ஆண்டனை. இதனை அறிந்து தேவர்களுக்கரசனாகிய ஆயிரங்கண்ணன் பிராமணவேடம் பூண்டு சிட னாய் உன்பிரீதியைச்சம்பாதித்துஉன்குணத்தைக் கவர்ந்துகொண்டான். சிறந்த அறிவும் ஆண்மையும் பொருந்தின பிரஹ்லாதனே! எனக்கும் மற்றவைகளுக்கும் மூலாதாரம்நல்லொழுக்கமாகிய நடையேயன்றி வேறில்லை" யெனக்கூறி அக்குணம் போன விடத்து ஐசுவரியமும் சென்றது. *

மகாபாரதத்துப்பொதிந்துள்ள அநேககதைகளினின்றும்நாம் அறியக்கூடியது இன்ன மொருவிஷயம் உளது. அதாவது, எது ஒருவனுக்கு நன்னடை எனக் கொள்ளப்படுகிறதோ அதுவே மற்றொருவனுக்கும் நன்னடையாகவேண்டு மென்பதில்லை. ஒருவன் நடக்கவேண்டிய முறை அவனுடைய நிலைமைக் கியைந்தது. மாணாக்கனாயிருந்தால் உன்னுடைய கடமை உபாத்தியாயர்சொற்படி நடக்கவேண்டுவது. உபாத்தியாயராக விருக்கும்பக்ஷத்தில் மாணவர்கள் இவ்வாறுநடத்தல் வேண்டுமென்று நீ அவர்களுக்கறிவுறுத்துவது நியாயந்தான். தகப்பனா யிருக்கும்பக்ஷத்தில் பிள்ளைகளை அபிவிருத்திக்குக்கொண்டு வரத்தக்க காரியங்களைச் செய்தல் உன்னுடையகடன். பிள்ளையோ தன்தகப்பனார் சொற்படி, " தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்னு மூதாட்டியின் மூதுரைக்கிணங்க நடத்தலே தகுதி. ஒருவன் தன்னிலைமையின்னதென்றும் அதற்குரிய நடையுடையனாதல் வேண்டுமென்றும் அறிந்து நடந்தாலொழிய அவன் தனக்கும் பிறர்க்கும் பயன்படான். கல்விகற்கும் சிறார்கள் மாணவர்க்குரிய கடமைகளைப் பூர்த்திசெய்து கொண்டுவரவேண்டுமேயன்றி ஸம்ஸாரத்தைத் தாங்குவோருடைய கடமைகளைத் தாங்கள் தலைமேற்கொள்ளல் தமக்கும்

* சாந்திபருவம் § 124.

பிறர்க்கும் துன்பத்தை விளைவிக்கும். மகாபாரதம் அநேகசந்தர்ப்பங்களில் ஒருவனுடைய நடைக்கும் நிலைமைக்குமிருக்கும் சம்பந்தத்தைப்பற்றியும், தாரதம்மியத்தைக் குறித்தும் வற்புறுத்துகின்றது.

மேலும், ஒவ்வொருவனும் தானறிந்து நடக்கவேண்டிய நானாவித நடைகளைக் குறித்தும் கூறுகின்றது இப்புத்தகம். மற்றவைகளோ அப்படியில்லை. சில புஸ்தகங்கள் சிலர்க்கே பயன்படும். கடின நடையில் எழுதப்பட்டவை கற்றவர்க்கன்றி மற்றவர்க்குப் பயன்படா.

மதவிசாரணை செய்யும் சில புத்தகங்கள், இலக்கணம், இலக்கியம், தர்க்கம், முதலியவைகளில் பாண்டித்திய முடையார்க்கே உபயோகமாகும். நிரக்ஷர குட்சிக்கு யாது பிரயோசனம்? பாரதமென்னும் புத்தகமோ அப்படிப்பட்ட தன்று. எல்லோர்க்கும் பயன் படத்தக்கது. ஒருவன் கற்றது எவ்வளவு குறைவாயிருந்த போதிலும், அவன் தனது சக்தியால் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்களும் இதிற்சிலவுள. கல்லாதவர் கேட்டறியலாம். கற்றவர் ஒவ்வொருவரும் கற்றுங்கேட்டுமறியலாம், அதனால் மிக்க பயனையுமடையலாம். வேறு நூல்கள் கற்காமற்போன போதிலும் கற்றறிய அவகாச மில்லாமற்போயினும், இந்தப்புத்தகத்தையாயினும் வாசிப்பார்களாயின் தாம் உய்வதற்குரிய மதஞானமும் குணஞானமும் எளிதில் அடையலாம்.

(2) அதிற்சொல்லப்பட்ட தத்துவங்கள் புத்தியைக் கொண்டு அறிய வேண்டியவைகள். மனிதனுடைய புத்தி மிருகம் முதலிய ஜெந்துக்களுடையபுத்தியைக் காட்டிலும்விசாலமும் கூர்மையுமுடையது. பகுத்தறிவும் சேர்ந்து ஆறறிவுடையனாதலின் இவனது புத்தி மிகவும் சிறந்தது. மேலே தத்துவமறியக்கூடிய புத்தி யென்றது இப்பகுத்தறிவும் சேர்ந்த புத்தியைத்தான். தத்துவ நூல்என்பது கடவுள் மனிதன், பிரபஞ்சம், இவற்றின் சொரூப முதலிய குணங்களையும், ஒன்றிற்கொன்றுள்ள சம்பந்தத்தையும் எடுத்துச்சொல்லி அவற்றை யெல்லாம் ஓரொழுங்கு படுத்திக் காட்டுவது. மகாபாரதமும் ஒரு பெரிய தத்துவத்தைக் கற்பிக்கி

ன்றது. ஆய்ந்துபார்க்கின் அது தான் இந்துமத முழுதும்பரந்திருப்பது. எல்லாவற்றிற்கு மொரு முதல்வன் உண்டென்றும் அவனைத்தான் ஈசுவரன், பரப்பிரம்மம் முதலிய பேரிட்டு வழங்குகிறார்களென்பதும் ஒவ்வொரு ஜெந்துவினிடத்தும் ஒவ்வொருவஸ்துவினிடத்தும் குடிகொண்டிருப்பவன் அவனேயென்றும் போதிக்கின்றது. சூரியசந்திரர் தாம் தினஞ்செய்துவரும் வேலைகளைச் செய்யும்படி செய்கிறவனு மவன்தான். புல், பூண்டு, மரம், கொடி, செடி, மிருகம் முதலிய பலவகைப்பிராணிகள், தேவர்கள், மனிதர்கள் இவர்களின் உயிருக்குயிராயிருப்பவனும் அவன்தான்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்."

பிறந்திளைத்த உயிருக்குயிராயினன் எனவே இறைவனில்லாதவிடமென ஒன்றில்லை என்கிறது. அவனெங்கு மிருக்கிறானெனவே எல்லாவற்றிலு மிருப்பது ஒருயிரே, அவ்வுயிர்தான் கடவுளும். இவ்விதமாய்ப்பார்க்கும்போது எல்லாஜெந்துக்களும் ஒன்றேயாம். இதனால் நமக்கு எல்லா ஜெந்துக்களிடத்தும் அன்பும் ஆர்வமும் அருளுமிருத்தல் வேண்டுமென்பது புலப்படுகின்றது. எல்லாவுயிர்களிடத்தும் ஒருபொது உயிர் பொருந்தி யிருப்பதினால், பிறவுயிருக்கு எவ்விதத்துன்பஞ்செய்தாலும் நாம் நமக்கே துன்பம் செய்துகொண்டதுபோ லாகின்றது; ஆகவேதான் மன்னுயிரையுந் தன்னுயிரைப் போற்பாதுகாத்தல் வேண்டுமென்பது. இதைக்குறித்து மொருகதையுமுளது. உஷிநாரன் என்னும் மறுபெயர்பூண்ட சிபிச் சக்ரவர்த்தி இராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டுவந்தான். மன்னர்களுக்குத் தன்னாட்டிலுள்ளாரனைவரையும் தன்னுயிரைப்போல் பாதுகாத்தல் கடமையாதலின், அதைச்சிபிச் சக்ரவர்த்தி சரியாய் நிறைவேற்றிக்கொண்டு வருகின்றானா, இல்லையா என்று சோதித்துப்பார்க்கும்பொருட்டு, தேவேந்திரனும் அக்கினிபகவானும் பருந்தும் புறாவுமாக வேடந்தரித்தார்கள். பருந்துபுறாவைத்துரத்திக்கொண்டேகவே புறா அரசனிடம் அதிவேகமாய்ப்

பறந்துபோய்த் தன் இரையான புறவைத் தன்னிடம் சேர்க்கும் படி பருந்து அரசனைக்கேட்க, தன்னிடம் சரண்புகுந்த ஜெந்துவை அநாதரணையாகவிடுதல் தர்மமன்று; ஆகையால் கொடுக்க மாட்டேனென்றனன். பருந்து இராசனைநோக்கி, "ஓ அரசனே உன்னுடையகடமை எல்லாரையும் காக்கவேண்டுமென்பதென்றல்லவோ சொல்லுகிறாய். அப்படியாயின் நான் விரும்பிப் பின்பற்றிய இரையின்றிப் பசியால் யான்வருந்தி அதனால் மரணமடையின் அதுவும் பாவமாகாதோ? ஒன்றைக்காத்து மற்றொன்றைக் காவாதிருத்தலின் பயன்யாது?" என்று விதண்டாவாதம் செய்ததும் அவனப்பருந்தை நோக்கி உனக்கு ஆகாரம் வேறென்ன வேண்டுமானாலும் தருகின்றேனென்ன, மற்றவையினிடத்து எனக்கு விருப்பமில்லையெனப் பருந்து முறையிட்டது. புறவைக்கொடுக்க மனமில்லாதபக்ஷத்தில், அப்புறு எவ்வளவு நிறையுள்ளதோ அவ்வளவு உன்னுடைய மாமிசமாயினும் கொடுத்தால் தான் எனக்குத் திருப்தியாகுமே யொழிய வேறொன்றும் திருப்திசெய்யாதென்றது. அதற்கோ அரசன் அகமகிழ்ச்சியுடன் சம்மதித்தான்.

அதிகக்களிப்புடன் துலையின் ஒரு தட்டில் புறவை வைத்து மற்றொரு தட்டில் தன் தேகத்துமாமிசத்தில் கொஞ்சம் சேதித்து வைத்தனன். "மெலியது மேன்மேலெழச்செல்லச்செல்ல வலிதன்றேதாழும் துலைக்கு" என்பதற்கொப்ப, புறு இருந்த தட்டு, தசையை விட்டெழும்பவேயில்லை. இவன் தன்தேகத்திலிருந்த தசையை யெல்லாங் கொஞ்சங் கொஞ்சமாக அறுத்தறுத்துத் துலைத்தட்டில் வைத்துப் பார்த்தும் அதிலிருந்து அக்கினி பகவானாதலின், அத்தட்டு மேலெழவேயில்லை. அஸ்தி மாத்திரமிருந்த அவ்வரசன் அந்தத்தில் ஒன்றுந் தோன்றாமல் தானும் தராசின்றட்டில் ஏறினான்; உடனே ஆனந்தமடைந்தான், இருதட்டும் ஒரு நிலையினின்றனவாதலின். இவன் தன் தேகத்தின் மீதும் அபிமானமில்லாது தன்னைச்சரண்புகுந்தது எவ்வளவு அற்பமான ஜெந்துவாயிருந்தபோதிலும் அதை எப்படியாயினுங்காத்தல்தலையென்க்கடைப்பிடித்து நிறைவேற்றியதற்கு மிகவும் சந்தோஷமும் அன்பும் ஆர்வமுமுடையராய்த் தேவேந்திரனும் அக்கினிபகவா

* ஆரண்ணிய பருவம். §. 130. 131.

னும் தங்கள் நிஜஸ்வரூபத்தை அவனுக்குக்காட்டி ஆசீர்வதித்து வேண்டிய வரமுந்தந்து போயினர்.

(3) இவ்விதமான தத்துவோபதேசங்களிற் சிறந்த தன்றியும், மகாபாரதம் ஒரு பெரிய சரித்திரமாகவு மிருக்கின்றது. சில விஷயங்களில் சரித்திரத்திற்கு வேண்டுவனவற்றைப் பார்க்கினும் அதிக குணங்கள் பொருந்தி யிருப்பினும், ஒரு பெரிய சரித்திரமென்பதற்கையமேயில்லை. பதினென்பருவங்க ளடங்கிய இப்பெரிய புத்தகம் சுமார் ஐயாயிர வருஷங்கட்கு முன் நடந்தனவற்றை நடந்தவாறே சொல்கின்றது. ஐயாயிர வருஷங்கட்குமுன் ஸ்ரீகிருஷ்ணபகவான் மனுஷ காயத்தைவிட்டுத் தன் ஸ்வரூபத்தையடைந்தார். அவரதுமானிடரூபம் இவ்விடத்தினின்றுசென்றதும், கலியுகம் பிறந்தது. இதிலுள்ள சரித்திரமும் சற்றேறக்குறைய அதனோடே முடிவாகின்றது. முதலில் இது உண்மையான சரித்திரமென்றும், கட்டுக்கதையன்றென்றும் ஒருவன்தெளிந்து அறிதல்வேண்டும். இப்பாரத யுத்தத்தில் இந்தியாவிலிருந்தக்ஷத்திரிய வம்சத்தின் வேர் அடியோடே அறுந்துவிட்டது. இந்தியாவுக்கு யாதொரு பழுதும்வாராது ஓரிருப்புமதில்போலிருந்து காத்துக்கொண்டு வந்த க்ஷத்திரிய வம்சம் அநேகம் இதில் அடியோடேமாண்டு போயின. அப்படி யிதிற் சென்றதுபோக எஞ்சிநின்றது பலமற்று இளைப்புற்றிருந்தது. வச்சிரக் கவசம்போன் றிருந்த இச்சாதியர் மடிந்ததனால் இந்தியா எளிதில் இழிவடைவதற் கேதுவாயிற்று.

கலியுகமாகிய இக்காலத்திலேயோ ஜனங்கள் சாதாரணமாய்த் தெய்வங்களிடத்தும் அவை நடத்திவரும் காரியத்தினிடத்தும் குறைந்த நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். ஐம்பொறிகளால் நுகரும்விஷயங்களில் அமிழ்ந்து விடுகின்றார்கள். பஞ்சேந்திரியத்தாலறியக் கூடியவற்றை மாத்திரம் நம்பத்துணிகிறார்கள். அநேகர்க்கு தாங்கள்தங்கள்கண்ணினல் பார்க்கக்கூடாதவைகளிலும் அல்லது பரிச முதலியவற்றால் அறியக்கூடாதவற்றிலும் நம்பிக்கை கிடையாது. அப்படிச்சொல்லுதல் அவர்க்குக் காக்கை வெளிதென்பது போலாகும். கடவுளும் அவர்கள் புலனுக்கு கப்புடாராதலின் கடவுளென்பவ ரொருவரிருக்கிறாரோ வென்று கூடக் கேட்கத் தலைப்படுகிறார்கள், இதுவே சிலர்க்கு ஐயவினவாயிருக்

கின்றது. அவர்கள் முழுதும் நம்பமாட்டோம் என்று சொல்லத் துணிகிறதுமில்லை. முற்றும்நம்பிநடக்கிறதுமில்லை. அவர்கள்நடை மாத்திரம்நாஸ்திகருடைய நடைபோன்றுளது. பிரதிதினமும் கடவுளாலாகும் ஒவ்வொருகாரியமும் அவராலானதாக நமதுகண்ணுக்குத்தோன்றவில்லை. ஆய்ந்தறிவதும் எளிதில் கஷ்டமாய்த்தோன்றுகின்றது. இதைத்தெரியாத ஜனங்கள் எல்லாவற்றிற்குங் காரணம்பிரபஞ்சத்தின் இயற்கைவல்லமை யென்கின்றார்கள். சூரியன் உதிக்கிறானென்றும் சந்திரன் தனது குளிர்ந்த கிரணங்களோடு கூடி நல்ல பிரகாசத்தைத் தருகின்றானென்றும், ஜலம் ஓடுகிறதென்றும், நெருப்பெரிகிற தென்றும் சொல்லுகிறார்கள். இப்படி இவைகள் நடப்பது இவற்றின் சுபாவமென்றும் சொல்வார்கள். ஆயினும் ஆய்ந்து பார்க்கின் ஒவ்வொன்றிலுமொரு தேவதையிருந்து காரியத்தை நடத்திக்கொண்டே யிருக்கின்றதெனப்புலப்படும். நெருப்பு வீட்டிலெரியினும் காட்டிலெரியினும் அதுவும் ஒரு தெய்வத்தாலன்றித் தானேயெரியாது. கடவுளிவ்விடத்தில் தீயின் ரூபமாயிருக்கின்றார். அக்கினிபகவான் இவ்விடத்து அவ்வெரியுருவமாய்க் காட்டுகிறார். கங்காநதியின் ஜலமானது ஒரு பெரிய அடங்கா வெள்ளமாக வருவதும் ஒரு தேவதையின் காரியமேயன்றி வேறன்று. கங்கையானவள் தேவலோகத்தில் வேறு ரூபத்தோடு கூடியிருந்தபோதிலும் இவ்விடத்து ஓர் நதி ரூபமாயிருக்கிறாள். இதை நம்பாவிட்டால் மகாபாரதம் நம்மறிவிற்கு என்றும் புலப்படாது. மயக்கத்தையே விளைவிக்கும். எல்லாவிஷயங்களும் நமக்கு இப்போது எப்படிப்புலப்படுகிறதோ அப்படியே பாரதத்திற்சொல்லாமல், அந்நாள் எப்படி நடந்ததோ அப்படியேகூறப்பட்டுளது. காண்டவவனம்தீயினலழிந்தது என்று சொல்வதற்குப் பதிலாக அக்கினிபகவான் எரித்தழித்தாரென்றுசொல்வது மரபாயிருக்கிறது. தேவர்கள் வருகிறார்களென்பதும்போகிறார்களென்பதும்தேவதைகள் இதைஆக்குகின்றனவென்பதும் அதை அழிக்கின்றனவென்பதும் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. தெய்வத்தில்நம்பிக்கையில்லாதவர்கள், இப்படிச்சொல்வதெல்லாம் கற்றோர் தம்சாமர்த்தியமே யன்றி உண்மையாய்ப் பார்க்கும்போது ஒன்றுமில்லை யென்பார்கள். அன்றைக்கு நடந்தது இன்றைக்குந்தான் நடந்துவருகின்றதென்று சொன்னல்அநே

கர் நம்பார்கள். இவர்கள் நம்பினுலென் ? நம்பாக்காலென்? அன்றைக்கெவ்வளவு நடந்து கொண்டுவந்ததோ அது இன்றைக்கும் தான் நடந்துவருகின்றது. அக்காலத்தோ, தான்எதிர் நின்று காரியம் நடத்துவதை ஜனங்களும் பார்க்க விட்டிருந்தார். இப்போதோ அப்படிப் பார்க்க விடுகிறதில்லை. ஏனெனின் மனிதர்கள் விஷயங்களுக்கு அடிமையாய்ப் போய் இறைவனை விருப்புடன் நாடுகிறரில்லை. பரமனுடைய பாததாமரையைப் பணியும் பரிசுத்தமனதுள்ள ஞானிகளுக்கே பரமனைப்பார்த்தல் எளிது. அத்தன்மையானவர்கள் இப்போது மிருக்கிறர்கள். அவர்களும் இப்புஸ்தகத்தில் அதிக நம்பிக்கையுடையவர்கள். அவர்களுக்கும் இதிலுள்ள கதைகள் விந்தையாகத்தோன்ரு.

பிரபஞ்சத்தினது கண்ணுக்குப் புலப்படாப்பாகத்தை, சுபாவாதீதமென்று சிலர் சொல்லுகிறர்கள். அதுபிழையேயாகும். பிரபஞ்சத்தின் பெரும் பாகத்தினும் நமது கண்ணுல் காணக்கூடாத எவ்வளவோ லோகங்கள், அண்டங்கள், பிராணிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைதாம் நாமிருக்கும் இப்பூமியை இயக்குகின்றன. ஆகலின் சுபாவாதீத மென்பது பொருந்தாது.

அந்நாட்களில் கடவுளர் வந்து மனிதர்களுக்கு உபதேசம் செய்து போயினர்கள். சில சமயங்களில் நேரேயும் சில சமயங்களில் ரிஷிகள் மூலமாயும் அறிவு ஊட்டுவித்தார்கள். மனிதர்கள் உபயோகத்திற்கு மந்திரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. மந்திரமென்பது ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியம், அதனுடைய சப்தம் நமது கண்ணுக்குப்புலனுகாத லோகங்களில் அதிக வல்லமை பெற்றிருக்கிறது. அம்மந்திரத்தைஉச்சரித்தமாத்திரத்திலேயே அருமையானகாரியங்களெல்லாம் சாத்தியமாகின்றன. ஆழ்ந்தாலோசிப்பதற்கு அக்காலத்து மனிதர்களறிந்து கொண்டிருந்தார்கள். ஆகையினுல் அவர்கள் எண்ணங்களே எண்ணியவாறு நிறைவேற்றத்தகுந்த வன்மையுடையனவாயிருந்தன. மனிதன் கடவுளைப்பற்றித் தியானித்ததாகவும் அவர் அவனிடம் வந்ததாகவும் நாம் அனேக விடங்களில் சொல்லப்பட்டிருக்கிறதைக் கற்றுங் கேட்டு மிருக்கிறேம். அஸ்திரத்தைப்பற்றி நினைத்தான். அஸ்திரம் அவன் கைக்கு வந்தது என்று சொல்லப்பட்டிருப்பதை யாம்

அறிந்திருக்கிறோம். எண்ணத்துக்கு அப்போதிருந்த சக்தி இப்போது மிருக்கிறது. மேற்புல விஞ்ஞானிகள் அதன் சக்தியைச் சில நாளாகப்பரீக்ஷை செய்துகொண்டு வருகின்றார்கள். அக்காலத்தும் அம்மந்திரங்களைக்கொண்டு கடவுளை யழைக்கவாவதுஅல்லது ஓரஸ்திரத்தை அடையவாவது எல்லா மனிதராலு முடியவில்லை. தக்கஞானமுள்ளவர்கள் உபயோகித்தால் பலனுண்டேயன்றிமற்றவர்களால் யாதொன்று முடியாதிருந்தது. இக்காலத்திலும் யோகிகளிற் சிலர் தாம் தம் எண்ணத்தை இவ்வாறு உபயோகிக்கலாம். ஏனெனின் அப்போதிருந்த கடவுளர் தாம் இப்போதுமிருந்துகொண்டிருக்கிறார்கள். அவர் தாம்வேறொருவராய் மாறவுமில்லை. அவர்அன்று ஏற்படுத்தினவிதிகளுமாறுபடவுமில்லை. மனம் மாறிப்போனவர்கள்மனிதர்களேயன்றிக்கடவுளரல்லர். மனிதர்கள் சக்தியற்றவர்களாய்ப் போய்விட்டார்கள். அதற்குக்காரணம் அவர்களுக்குக்கடவுளிடத்து நம்பிக்கையும் பக்தியுமில்லாமையே யாம்.

தேர்ப்பாகன் தன் இரதத்திற் பூட்டியிருக்கும் குதிரைகளை எப்படிச் செலுத்துகின்றானோ அப்படியே இவ்வுலகைக் கடவுளும் நடத்துகின்றார். பாகன் தன்னிடத்திலேயே இருந்து கலினத்துப்பூட்டியிருக்கும்வாரை எப்படியிழுக்கின்றானோஅதற்கியையப் பரிகளும் இரதத்தை யிழுத்துச்செல்லுகின்றன. அதைப்போன்று கடவுளும் உலகமாகிய இரதத்தின்மீது உட்கார்ந்து நானாவிதசக்திகளாகியகுதிரைகளைத் தன் இச்சாசக்தியாகிய வார்கொண்டிழுக்க உலகமும்செல்லவேண்டியவழிச்செல்கின்றது. எப்படிச்சென்றால் நலமோ அப்படி நடத்தப்படுகின்றது. உலகும் இம்மாதிரி தன் பிரயாணத்திலேயே சென்று கொண்டிருக்கிறது. இப்படிச் செல்வதற்கோர் நேர் பாதையுண்டு. அதற்குக்கிளைவழிகளு முண்டு. உலகம் தன் பிரயாணத்தின் உத்தேச இடத்தைச் சீக்கிரமடைய வேண்டுமெனின் மேற்சொன்ன நேரிய வழியாய்ப் போதல்வேண்டும். பார்வைக் கினிமையாய்த் தோன்றுங் கிளைவழிகளிற் போதற்கே மானிடர்க்கிஷ்டம். கடவுள் நேரிய வழிக்கிருபுறத்தினும் ஆழ்ந்த கால் வெட்டி வழிகாட்டு மரங்களும் பள்ள மிருப்பதைத் தெரிவித்தற்குரிய தம்பங்களும் நாட்டுவித்திருக்கிறார். இவ்வளவு ஏற்பாடு செய்தும் மனிதர்கள் கண்ணை மூடிக்கொண்டு வேண்டுமென்றுதானெனுமகங்காரத்தோடுஓதுங்கிப்போனால்பள்ளத்

தில் விழுந்து தம்பத்தில் தாக்கிக் கைகால்களை முறித்துக்கொள்ளு வார்கள். அதைத் தான் அவர்கள் துன்ப மனுபவிக்கிறார்களென் றும் நாம் சொல்லுகிறோம். இத்துன்பங்களும் கஷ்டங்களும் அகப் படுதற்கரிய அருமருந்தாகும். பார்வைக்கு மாத்திரம் பரிமளம் பிரகாசத்தோடு கூடியிருக்கும் அக்கிளைவழிகளில் இறங்கும் போதே இவ்வளவு துன்பமுள்ளதாய்ச் செய்துவைக்காவிடின் மனிதர்கள் தாம் கதிபெறுவதற்காகச் செல்லவேண்டிய நேரிய வழியை விட்டுப் பற்பல கிளைவழிகளிற் சென்றுவிட்டால், இவர் கதிபெறு தற்குரிய நேர்பாதைக்குத் திரும்பிவருவ தருமை.

சிலகாலங்களில் ஒரு ஜாதியார் முழுதும்நேர்வழிதப்பிச் செல் கின்றார்கள். அவர்போம்குறுக்குவழியிற் கடவுள் நின்றுகொண்டு ஒரு பெரிய யுத்தத்தையாவது, பஞ்சத்தையாவது, அல்லது ஒரு கொள்ளைநோயையாவது வருவித்து இவர்களை மருட்டி நன்னெறி குத் திரும்புமாறு செய்கிறார். ஒரு பெரிய ஜாதியார் துன்மார்க் கத்திற் போவதற்குப் பிரயத்தனம் பண்ணினால் போகவிடாது தடுத்தல் வேண்டும். போய்விட்டார்களாகில் மறுபடியும் இதற்கு வரமாட்டோம் என்று சொல்லும் புத்திவரும் வரையில் துன்பப் பட்டுத்தீரவே வேண்டும். எந்தயுத்தத்தின்சரித்திரம் மேலத்தியா யத்தின்கண் கூறப்படப்போகிறதோ அப்பாரத யுத்தமானது தேவர்களால் உண்டாக்கப்பட்டது. இந்தியரும் துன்மார்க்கத்தி னின்றுந்திரும்பி மேலேகூறப்பட்ட நேர்மையான வழியடைந்து கதிபெறுவதற்கு இந்த யுத்தம் இன்றி யமையாததாக இருந்தது.

(இன்னும்வரும்.)

கல்குளம். குப்புசாமி முதலியார்.

---

## தாமரைத்தடம்.

### தரவு கொச்சகக்கலிப்பா.

1. பொன்மயிலுஞ் சொன்மயிலும் போத மகிழ்சிறந்து
புன்மையின்றி நாளும் பொருந்தி விளையாடு
நன்மையுறு பாண்டிவள நாட்டின் றலைநகராம்
வன்மைநனி பெற்றவெழின் மாமதுரை யம்பதிக்கண். (க)

2. வையைக் கரையில் வளர்ந்தோங்கி வானுலவு
மையைத் தமகிளையான் வன்பிற் றளைப்பவவை
கையைப் பிசைந்து கலுழ்ந்துகண்ணீர் காலவிட்டுச்
செய்யிற் பயிர்வளர்க்குஞ் சீரார் தடங்காவில். (உ)

3. மன்னுமொரு செந்தா மரைத்தடத்திற் சென்றுட
னன்ன ரொருஞான்றை நாளந்திக் காலையினிற்
றன்னந் தனியேயான் சார்ந்தேனு வென்பின்ன
ரென்னை யறியாம லென்னினிய வில்லாளும். (ங)

4. போந்து மறைந்துநின்றுள் பொய்கைக் கரைசென்று
சேர்ந்து கடவுளையான் சிந்தித் திருப்புழிக்கோம்
பார்ந்து பறவையெலா மன்பி னிசைகூட்டி
யேய்ந்து பரிதி யெழல்கண்டு கொண்டாடி. (ச)

5. நின்றனவப் போழ்தத்து நீரின் முளைத்தெழுந்து
துன்றியசெந் தாமரையின் றூயநறும் போதனைத்து
மென்றாழ் வரல்கண் டினிதி னலர்தனயான்
மன்ற விழிவிருந்து வாய்த்த தெனுமகிழ்ந்தேன். (ரு)

6. தண்ணீ ரருகிற் றனிச்சென்றேன் றாமரையி
னுண்ணீர்மை கண்டே னுளத்துவகை கொண்டேன்றங்
கண்ணீர் வடித்தவவை கண்ணுற்ற யானுமின்பக்
கண்ணீர் வடித்தேன் களிகூர்ந்து நின்றேனுல். (சா)

7. என்னே யியற்கைநல மென்னே யிறைமகிமை
யென்னேயென் னேயென்ன வின்பக்கூத் தாடினேன்
கொன்னே யிராதுகரங் கூப்பித் துதித்தேன்யான்
றன்னேரி லாத தனிக்கருணை வள்ளலையே. (எ)

8. கூடிவாழ் வோரே குறையா வலியினர்மற்
றோடிவில கிட்டா ருறுவ துறுகணென்றே
நாடி யறியா நமரங்க டேரவன்றே
பீடுடைய தாமரைகாள் பெட்பி னெருங்குறைவீர்? (அ)

9. நும்மியல்பு கண்டு நுனித்துணர்கி லார்பலரே
யிம்மையே யிவ்வுலகை யின்பவுல காக்குகிற்பீ
ரம்மம்ம நுந்த மறிவுடைமை யென்னென்கோ
தம்மின் மலர்கா டமியேற் கொருமுத்தம். (கு)

10. என்றுசொல்லி மூத்த மிடுதலுமென் றன்பின்னர்
நின்றமனை யாள்யா னினையாத வண்ணமின்னே
யொன்றியவிவ் வின்ப மொழியுமெனச் சொல்வாள்போ
லென்றன் விழியை யிமைப்பொழுதி லேபுதைத்தாள். (க௦)

11. ஈதுணர்ந்த யானுமென்ற னின்னுயிர்நற் காதலியே
போதும் விடுதியெனப் பூவொன்று நீர்கொய்தென்
மீதுள்ள காதலுக்கு வேண்டு மறிகுறியாப்
பேதையேற் கீயிலொன்றும் பேசேன் விடுவலென்றாள். (கக)

12. நன்றுநன்று நின்றன்மொழி யென்று நகையாடி
யென்றன் கருத்திஃ தெனயா னவிலுமுனந்
தன்றன்விருப் பிற்குத் தடையொன்றுஞ் சொல்லாம
னன்றுநன் றென்றேனா நாடி விடுத்துநின்றாள். (க௨)

13. நங்கா யியற்கையெனு நல்லா ளழகெல்லா
நங்கண்ணுற் கண்டு நனிநுகரத் தக்கனகாண்
பொங்கு மனத்துவகை பூத்தின்ப மெய்தாது
தங்கு மவளழகைத் தான்குறைத்த னேரிதுகொல்? (க௩)

14. மக்களெலாங் கண்டே மகிழுறுதல் வேண்டுமென்று
தக்க கடவுளார் தாம்படைத்தா ரஃதுணரா
யிக்குமொழிக் காரிகையே யென்றலுமன் னாளெழுந்து
துக்க முறாளியற்கை தூய குணமுடையாள். (க௪)

15. தன்னுடைய மக்களெலாந் தன்பக்கற் போந்துமிகத்
தன்னுடலைப் பற்றியுறத் தாவிமேல் வீழ்ந்திழுத்துத்
தன்னை மிதித்தாலுந் தாய்களிப்புக் கொள்ளலன்றி
யென்னையணு காதீ ரெனச்சீற்றங் கொள்வாளோ? (க௫)

16. வாய்பொதிந்த செப்பினிடம் வைகுமலர் போலாது
பாய்புனலு ணின்று பலருந்தன் பால்வந்து
தாய்போற் கருதியவர் தாந்தாம் விரும்பியன
வாய்புகொள வேண்டியன்றோ வன்னாண் முகமலர்தல்? (க௬)

17. அற்றன்றேற் கேண்மினென தன்புடையீர் நாமுண்ண
லுற்ற பொருள்களெலா முண்ணா தொழிந்திடுவா
நற்றண் புனலினிநாம் நம்வாய் பருகலமே
சற்றுமசை யாதியற்கை தன்னழகு கண்டிருப்பாம். (க௭)

18. இவ்வாறு வாதித் தெனாதின் னுயிர்த்துணைவி
யொவ்வா துமதுரைமற் றுந்தோல்விக் கீடாக
விவ்வேளை யோடிச்சென் றெற்கினிய பூவொன்று
செவ்வே கொணர்மினெனச் செப்பினா ளப்படியே. (௧௮)

19. மலரொன்று கொண்டு வரநீரு ணீந்தி
யுலகின் றலர்ந்த வலர்தம்மு ணன்ன
ரிலகுற்று நின்ற வியல்வண்டு வீழா
நலன்மேவு பூக்கொய்து நானோடி வந்தேனால். (௧௯)

20. வந்தென் றலைவியினை வாயார வாழ்த்தியெழி
னந்தாத தாமரையி னாண்மலரை யான்மகிழ்ந்து
தந்தே னவள்கரத்திற் றையலுமஃ தேற்றினிய
மந்தநகை செய்து மலர்ந்தாண் முககமலம். (௨௦)

21. தங்க ளினத்தாரைத் தாங்களே கண்டக்காற்
பொங்கு மனத்திற் புரிந்தன்பு பாராட்டி
யங்கே யுபசரித்த லன்னார் வழக்கன்றோ
விங்கெனுளக் கஞ்ச மினிது மலர்ந்ததே. (௨௧)

22. அப்போதென் னாருயிர்க்கோம் பன்னா ளெனைநோக்கி
யிப்போது காண்மினோ விப்போதை யென்னலுநின்
கைப்போதுந் தாமரைகாண் கட்போதுந் தாமரைகா
ணெப்போதுந் தண்முகமு மொண்டொடியே தாமரைகாண்.(௨௨)

23. போதாக் குறைக்குநின்றோட் போதுகளுந் தாமரைகா
ணாதலா னம்மலரு மன்பினழ கோங்கியதான்
மாதேநின் கைப்பரிச மாண்புறுகண் ணோக்கமுந்தும்
மீதே படப்பெற்றால் வீறாவோ வெப்பொருளும். (௨௩)

24. என்ன வுரைசெய் தெளியேனு மம்மலரை
யின்ன றவிர்க்கு மெழிற்பொருளே யென்றுமுத்தந்
துன்னி யிடுதலுமென் றோகைமுகங் கோட்டினா
ளென்னினுமிப் போது நமக் கோர்மிக்குத்தோன் றுங்கொல்?(௨௪)

25. இந்தவுரை யென்செவியி லெய்து மளவினிலே
சந்த வடிவுடைய தையாலித் தாமரைநின்
னிந்து முகத்தி லிடுமுத்தந் தானளிக்குஞ்
சிந்தைகொளின் பத்திற் சிறிதேனு மீயவற்றோ? (௨௫)

26. என்றறிவான் வேண்டியா னிட்டே னொருமுத்த
மன்றியுமச் செந்தா மரையி னலர்தானு
நின்றன்கைப் பங்கயத்தி னேர்ந்தழகு மிக்கொளிர்பு
நின்றதனைக் கண்டேனா னின்மலச்செம் பொன்னனையாய் ! (உசு)

27. உண்மை யெனிலிவ் வுரைதானிப் பூங்கடத்திற்
றண்மை மிகுந்திலங்கு தாமரையின் போதொன்றை
யண்மியிவண் யானிலெனென் றுனந்த மாய்வளைத்து
முண்மகிழ்ந்து நீர்தா மொருமுத்த மிட்டதென்னோ ? (உஎ)

28. தாது முகுத்துத் தளையவிழ்ந்து தேன்றுளிக்கும்
போதுகண்ட வென்மனந்தான் பொன்னே யுனதெழில்கொள்
சீத மலர்முகங்கண் சிந்தித்து நிற்பவெற்குக்
காதன் மிகுந்ததனாற் கண்ணேயான் முத்தமிட்டேன். (உஅ)

29. பூவிற் கணிகலமோ பொங்குறுசெந் தேனாகும்
பாவிற் கணிகலமோ பண்கொண்ட கற்பனைபூங்
காவிற் கணிகலமோ கஞ்சமலர் வாவியென்ற
னாவிக் கணிகலநீ யன்றோவென் னாரணங்கே. (உகூ)

30. காம்புறழ்பைந் தோளுடைய காதலியு மென்மீது
தோம்புனைந்து சொல்லுதற்குந் தோன்றும விஃதுரைத்தா
டாம்புரிந்த வெச்செயற்குந் தக்கவா காரணஞ்ச
டாம்படைத்துக் கூற றமிழ்வாணர் தம்மியல்பாம். (௩0)

31. இதுநிற்க யானோ ரெழின்மலர்கொய் பாக்குக்
கதுமென்ன வொன்றுங் கருதாது நீரிற்
புதுமலரி னாப்பட் புகுந்துழியென் றாளி
லதன்கொடிசுற் றிக்கொண்டா லன்றோவென் போக்கென்கொல்.

32. நீயிதனைச் சற்று நினையா தொருமலர்க்காப்
போயதனைக் கொண்டு புகவெற் பணித்தமையை
யாயும் பொழுதி னதுதா னெவர்தமையு
மேயேநி னுள்ளமிரும் பென்றெண்ணச் செய்யுமரோ. (௩உ)

33. செந்தா மரைக்கொடியாள் சீர்க்கற் புடையளவள்
கந்தமலர் கொய்வான் கடுகிவரு வோரையவர்
தந்தாள் செறித்திடா டானே விலகிநிற்பா
ளந்தோ நுமதுமொழி யம்ம வதிசயமே. (௩௩)

34. அல்லதவ டன்பாலோ ரன்னியனென் காதலனைச்
சொல்லலளோர் காரணமுஞ் சுற்றிவைத்துக் கொள்வாளேற்
கொல்லும் வினையாள் கொடியா ளெனும்பெயர்தா
னெல்லுமே யொல்லுமந்த வூறு விளைப்பாட்கே. (௩௪)

35. காரணமொன் றில்லாதக் கன்னிப் பசுங்கொடியா
ளேரணங்கே யென்னை விருப்பாளென் றன்னாட்கியா
னேரணங்கு செய்கிற்பா னற்றேனு லஃதொன்றே
சீரணவு காரணமாஞ் சிந்தித்துக் காண்மாதோ. (௩௫)

36. விள்ளரிய தம்முயிர்க்கே வீதல் வருமேனு
முள்ளற்க வொன்ற னுயிர்நீத்த லென்றுதிரு
வள்ளுவனார் வாய்மலர்ந்த வண்மைத் திருக்குறளும்
முள்ளத்தி னின்று மொழிந்ததுகொ லொண்புலவீர் ! (௩௬)

37. நீவிர் மறக்கினுமந் நீள்கொடியா டான்மறவாள்
பாவலரே யென்று பரிகசித்தா ளென்னையென்றன்
பாவையனை யாள்யானத் தாமரைப்பூம் பைங்கொடிக்கு
மேவரிய நல்லறிவு முண்டோ விளங்கிழையாய் ! (௩௭)

38. எனுவினவி நிற்க வெனுது தலைவி
தனுதுமேற் கோளைவலி தானுறுத்தல் வேண்டி
யுனுது சொலப்புகுந்தீ ரொக்குமுந்தம் வாத
மனுதிகளுக் கெட்டாதும் வான்றருக்க வண்மையென்றாள். (௩௮)

39. வாளா விகழ்ந்தாலும் வன்மைபெரு துன்வாதம்
வாளார் விழிவெருட்டல் வைதலிவை யாவுமுன்கோ
ளோக்கும் தோல்விநிலை சூழ்ந்தறிதி மங்கையர்தஞ்
சூளா மணியாகத் தோன்று மடவனமே. (௩௯)

40. நிற்பிர் சிறிது நியாயநூல் வல்லீர்நுஞ்
சொற்படியப் பைங்கொடிக்குத் துன்ப மிகவுநும்மா
லுற்பவித்து மன்னு ளுமக்கொன்றுஞ் செய்யாமை
வற்புறுத்து மன்றோவென் வாதத் தினைப்புகலீர் ? (௪0)

41. என்னே வொருபொழுதி லென்னதுமுன் றன்னதுமா
முன்னல் வினைதுணையா முட்டுப்பா டில்லேனு
நுன்னருகர்ப் போந்ததன்றி நோக்குமிடத் துன்மேற்கோ
ளென்னணமோ வன்மைபெற லெற்கியம்பு வாய்மயிலே ! (௪௧)

42. மேலொன்றுஞ் சொல்லாள் வெகுண்டாடன் மெய்வியர்த்தாள்
வேலொன்று கண்ணாள் விதனமீக் கூர்ந்தவணோர்
பாலொன்றி நின்றுள் பனிமுகம்வா டக்கண்டென்
பாலொன்று மின்மொழியாய் பைவரனீ யெய்தியதென் ? (சஉ)

43. கூறுயெ னின்சொற் குயிலே யெனதுமன
மாறுதிப் போழ்தே யறிவுறுத்து வாயென்னை
வேறுகக் கொள்ளாய் விளம்பா யெனவுரைத்தோ
ராறேனுங் காணே னவட்டழீஇ முத்தமிட்டேன். (சங)

44. இட்டேன் முகமலர்ந்தா ளென்மீது தன்கரம்வேய்ந்
தட்டேன் றுளித்தெழல்போ லுற்றவிழி நீர்பெய்தாண்
மட்டேறுஞ் செங்குமுத வாய்மலர்ந்து பாடினாள்
விட்டா டனதுடன் மின்னே ரிடையாளே. (சச)

45. ஏமமிக வெய்தினேன் யானு மிவைகாணூஉத்
தேமலர்க்கஞ் சக்கிழவன் செம்பரிதி விண்ணிவர்ந்தான்
காமருசெந் தேன்மொழியென் கைப்பிடித்துக் கோடலும்யாந்
தாமரைப்பூம் பொய்கைவிட்டுச் சார்ந்தோ மெமதிலமே. (சரு)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

## வாழ்க்கைப்பயன்.

### III. பணவிஷயம்.

ஆங்கில தேயத்தில் வீண் செலவின்மையின் மேன்மை போதியவளவு அறியப்பட்டில தென்றஞ்சுகின்றேன். நந்தேயத்தார் உழைத்துச் சம்பாதிக்கின்றார்; ஆனாற் பிறதேயத்தார் நம்மினும் மட்டாகச் செலவிடுகின்றார். அறிவுயர்ந்த குவேக்கர் விருத்தாப்பியனொருவன் 'பிள்ளாய், நீ செல்வமுள்ளோனாயிருப்பாயா என்பது நீ செலவிடுவதைச் சார்ந்ததேயன்றி நீ சம்பாதிப்பதைச் சார்ந்ததன்று' என்றுகூறினான். "செழித்தோங்குதற்கு மிதமான செலவே மூலமந்திரமாம்" என்பது உற்று நோக்குமிடத்து அதன் சொற்பொருளாலேயே விளங்குகின்றது.

செல்வ விஷயத்தைத் தவிர்த்தும் எதிர்கால வேட்கைகளைக் கருதி மிச்சம் பிடித்து வைப்பது அறிவுடைமையும் நேர்மையுமே. 'வறுமைவாயிலில் வந்துற்றகாலை நேசம் சாளரத்தின் வழியாய் வெளிப்பறக்கும்' என்றொரு பழமொழியு முளது. ஆயினும் மனைவியையும் குழந்தைகளையும் உணவின்றி யாதல் உடையின்றி யாதல் தக்க மருத்துதவியின்றி யாதல் இளைப்பாறலும் காற்றில் உலாவலுமின்றியாதல் இருக்கக் காண்பதும் தாம் போதிய வளவு சுறுசுறுப்பா யிருந்திருந்தாலாதல் குற்றமற்றதாயினும் அனுவசியகமான ஒரு சீராட்டை மறுத்திருந்தாலாதல் அவர்களைத் துன்பக்கவலைகளி னீக்கலாம் என்றுணர்தலும் விசனகரமானவையே.

பணவாசை கொண்டு அதனை மட்டாய்ச்செலவிடுதல்இழிந்ததே; ஆனால் சுவாதீனத்தின் பொருட்டுச் செலவைக்குறைத்தல் நேரியதும் வீரத்தன்மை பொருந்தியதுமாம்.

எப்பொழுதும் கணக்குவைம்மின். அதனையும் கவலையொடு வைத்துக்கொண்மின். ஒவ்வொரு குறிப்பையும் குறிக்கவேண்டுமென்று யான் எண்ணுகின்றிலேன். ஆனாற் பணமெவ்வாறு போகின்றது, பொருள்களின் விலையெவ்வளவாகின்றன என அவற்றை யறியுமாறு வைத்துக்கொண்மின். தனது வருவாயையும் தனது செலவையு மறிந்தோ னெவனும் வீண் செலவில் வீழான். பொருளழிப்போ ரனைவரும் தாம் செய்வனவற்றை யாலோசியாது செய்வதனாற்றான் அவ்வாறு போகின்றார்கள். எவனும் அழிவென்னும் செங்குத்துப்பாறையைத் திறந்த கண்களோடும் எட்டிப்பாரான்.

அற்றேல் நீர் எதைச்செய்வுழியும் வருவாய்க்குத் தக்கபடி வாழ்மின். சிறிதேனும் மிச்சம்பிடிமின். ஆனால் எவற்றினும் மேலாகக்கடன்வாங்காதீர். ஒருவனுக்கு வருடாந்தர வருவாய் இருபது பவுனும் வருடாந்தரச் செலவு பத்தொன்பது பவுன் பத்தொன்பது ஷில்லிங் ஆறு பென்சுமா யிருந்தால் பயன் இன்பமே. வரவு இருபது பவுன் செலவு இருபதுபவுன் ஆறு பென்சுமா யிருந்தால் பயன் துன்பமே என்று டிக்கேன்ஸ் (தாம்நேராக அப்புத்திமதியைக் கூறாது மிகாபர் என்பவரைக் கூறச் செய்தாலும் அது புத்தியிற் குன்றாதது) கூறுகின்றார். ஆயினும் ஒருஷில்லிங்கேவேற்றுமை. உமதுகையில் ஐம்பது காசுமட்டு மிருந்து ஒருவார முழுதும் அதற்குமேல் ஒன்றுங் கிடையாதெனில் ஒருவனிடம் ஒரு ரூபாய் கடன்வாங்கி நன்குண்டு வாழினும் ஒருபடி நெல்லை வாங்கி அதைக்குற்றி யதனாற் சீவனம் செய்மின்; கடன் அடிமைத்தன்மையே யெனல் குற்றமாகாது. 'கடன்படு வோர் துயர்க் கடற்படு வோரே'. வாழ்க்கையிற் பல பொருள்கள் நமக்கிணங்காதனவாம். மிக்க அநுபவசாலியான ஹேம்ரஸ்கிரீலி என்பவர் நன்றாகவும் உண்மையொடும் 'பசி, குளிர், கந்தை, உழைப்பு, நிந்தை, ஐயம், அநியாய இகழ்ச்சிகள், இவையனைத்தும் துன்பகரமானவை, ஆனாற் கடன் அவையனைத்தினும்

மிகத்தீயதே என்றுங்கடன்படாதே என்றுங்கூறினார். 'கடன்கொண்டு வாழாமை முன்னினிதே' என்றார் **இனியநாற்பதுடையாரும்** கடனுடைய கொடுமையைக் கவனித்தே **கம்பநாட்டாழ்வாரும்** "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினானிலங்கைவேந்தன்" என்றுமுவமித்தார்.

**காப்டேன்** என்பவர், "மீத்தவர் செலவழித்தவராகிய நன்னிலையிலிருப்போர், வீண் செலவாளிகள் என்று உலகம் எப்பொழுதும் இருவகையாக வகுக்கப்பட்டுளது. எல்லா வீடுகளையும் இயந்திரங்களையும் பாலங்களையும் நாவாய்களையும் கட்டியதும் மனிதனை நாகரிகமுள்ளோனாகவும் ஆக்கியுள்ள மற்ற பெரிய வேலைகளைச் செய்ததும் மட்டாய்ச் செலவிடுவோர்களே. தம் வருவாய்களை வீணாக்கினோர் எப்பொழுதும் அவர் தம்மடிமையாக இருந்திருக்கின்றார்கள், இயற்கையொழுங்கும் இறைவன் விதியும் இஃதிவ்வாறிருக்க வேண்டுமென்பதே. தாங்கள் எச்சரிக்கை யற்றும் எண்ணமற்றும் சோம்பேறிகளாயும் இருந்தால் தம்மையே தேற்றிக் கொள்ளவேண்டும் என்று நான் கூறுவேனாயின் நான் ஒரு படிறனாவேன்." என்று கூறினார்.

'இபீசஸ் என்னுமிடத்தில் ஆர்டெமிஸ் கோயில் கடன்காரர்களுக்குக் கடன் கொடுத்தவரிடமிருந்து அவர்கள் அடைக்கலம் புகுந்தால் தஞ்சமும் ஒத்தாசையு மளிக்கின்றது. ஆனால் மட்டாய்ச் செலவிடுவோரின் அடைக்கல இடத்துக்கு எல்லாநன்மன துடையோரும் போகலாம். அஃதவருக்குச் செளக்கியமா யிருத்தற்கு இன்பகரமும் கண்ணியமும் விசாலமுமான இடத்தைத் தருகின்றது' என்று **ப்ளூடார்க்**கூறியிருக்கின்றார். அற்றேற் கடன்வாங்காதீர், காரியமின்றிக்கடன் கொடாதீர்; உமக்குப் பணமும் வராது வந்தனமும் வராது. ஏனெனில் கடன் வாங்குவோரெப்பொழுதும் தாம் தீங்குசெய்யப்பட்டாராக எண்ணிக்கொள்ளுகின்றார்கள். உம்மாலானதைத் தாராளமாகக் கொடுங்கள்; ஆனால் அது திரும்பி வருமென்றெதிர்பாராதீர்.

பணம் முதலில் மெல்லவந்தால் அதுபற்றி அதைரியப்படாதீர். அஃதோரிடத்தும் திரும்பாது நேரே செல்லும் ஒருநெடுமறுகு. பணம்முதலில் எளிதாய் வரும்படி நேரிட்டால் நல்ல மறுகுகளும் தீய மறுகுகளும் கோணலுள்ளன என்றும், காலம் செல்லச்செல்ல உமக்கு ஒருவேளை பணம் அதிகமாக வேண்டியிருக்குமென்றும், எண்ணிக்கொண்டு அதை முழுவதும் செலவிடாது ஒருமழை நாளுக்குச் சேர்த்து வைம்மின். வியாபாரத்திற் பலர் முதலில் அதிக அதிர்ஷ்ட முடையோரா யிருந்ததனால் அழிவுற்றிருக்கின்றார்.

செல்வமுடையோராக அவசரப்படாதீர். 'நீர் தக்கதொருசித்திரத்தை விலை கொடுத்துப் பெற விரும்பாவிடினும் காலம் வாய்த்துழி அதுவே தன்னை நீர் விலை கொடுத்துப் பெறுமாறு செய்யு' மென்றார் **ரஸ்கின்துரை**யவர்களும்.

பணத்தைப்பற்றிக் கவலைப்படாதீர். அதிக பணம் சம்பாதிக்கச் சிலரே யெதிர் பார்க்கலர்மாயினும் சுறுசுறுப்பா யிருந்து மட்டாய்ச் செலவிடுவோனெவனும் உலகில் நன்றாக வாழலாம். நாமடிக்கடி பணம் அயோக்கியமாய் வந்ததென்று கேட்கின்றோம். ஆனால் வறுமை அநியாயமாய் வருகின்றதென்பதே நடக்கிற விஷயம். வறியரெனப்படுவோர் சிறிதுடையவ ரல்லர். அதிகமாக வேண்டுவோரே வறியரெனப்படுவர்.

தமது இனிய பிரசங்கங்களி லொன்றில் ஸர் ஜேம்ஸ் பேஜெட் என்பவர் தாம் நடைகளையுற்று நோக்கி யிருந்த தம் மாணாக்கரது விவரத்தைக் கூறினார். ஆயிரவரில் இருநூற்றுவர் தம் வேலையை விட்டார்,செல்வவான்களாயினார் அல்லது இளமையிலேயே இறந்தார். மீந்த எண்ணூற்றுவரில் அறுநூற்றுவர் நன்னிலை யெய்தினர்; அவர்களுட் சிலர் மிக்க மேதகவுடைய நன்னிலை யெய்தினர். இவருட் பதினைவர் பரீட்சைகளிலென்றுந் தேறவில்லை. பதின்மர் மிதமின்மையினாலாதல் குலையினாலாதல் தவறிவிட்டார். முழுத்தொகையாகிய ஆயிரவரிற் பார்வைக்குத் தங்கையி லகப்படாத காரணங்களால் தவறினோர் இருபத் தைவரே. மருந்தைப்போன்ற ஏனைய வாழ்க்கை வழிகளில் உம்மைப் பயனுள்ளோராகச் செய்து கொண்டால் உம்மைப் பயன் படுத்துவாரென்று நீர் நிச்சயமா யிருக்கலாம்.

உண்மையாகவே வாழ்க்கையின் மெய்யான இன்றி யமையாமைகளைப் பற்றி யெவனும் மிக்க கவலைப்படவேண்டாம். இயற்கையிலே மனிதனுக்கு வேண்டுவது சிறிது, கொடுப்பது பெரிது. இதற்கு எதிராக அவசியமல்லன செலவு வருவிப்பனவாகவுள. **ப்ரான்க்ளின்** கூறியபடி ‘ஒரு பாவத்தை வளர்க்கக்கூடியது இரு குழந்தைகளை வளர்க்கும்.’

**டியூக் ஆப் வெல்லிங்டன்** அறிவுடன் கூறியபடி ‘உயர்ந்த வட்டி முதலுக்குக் கேடு’ என்பதனை மறவாதீர்.

ஒருகூடையிற் பலமுட்டைகளை வைக்காதீர். உமக்கெவ்வளவு நன்றாய்ப் புத்தி கூறியிருந்தாலும் எவ்வளவு நன்றாய் நீ ராலோசித்துப் பார்த்திருந்தாலும் கணக்குக்களனைத்தினையும் தலைகீழாக்கத்தக்க தேதேனு மொன்று சம்பவிக்கலாம். மகா புத்திசாலிகளாகிய வியாபாரிகளும் சாவகாரிகளும் பிழை போகின்றார்கள். புத்தியுள்ள வியாபாரி யொருவன் எதிர்பார்ப்பதெல்லாம் பெரும்பாலும் சரியாயிருக்க வேண்டுமென்பதே. நாம் மிக்க இளைஞராயிருப் புழியே இரண்டும் இரண்டும் நான்கென் றறிகின்றோம். ஆனால் அவை யிருபத்திரண்டும் ஆகலாம். அங்க கணிதத்தின்படி இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு பெறுவோமென்பது சாலவுமுண்மையே. ஆனால் வாழ்க்கை நடக்கையில் அஃதொரு மயக்கம். அப்புத்திமதியை யநியாயமாய்ப் பொருத்துவதனால் முன்னுக்கு வரக்கூடியவரிற் பலர் அழிவுற் றிருக்கின்றார்.

அமரிக்கையாய்ப் பொருள்களை வாங்கிக் கொண்மின். ப்ருஹாம் பிரபு படமெடுக்கும்படி சிறிதுநேரம் கூட அசைவற்று உட்கார முடியாதென் றும் எப்பொழுது உட்கார்ந்தாலும் கோணலாய்ப் போகும் என்றும் கூறப்பட்டுளோம்.

வியாபாரத்திற் பலர் ஓரறையில் அசைவற்றுட்கார முடியாமையினால் அழிவடைந் துளரென்று பேக்ஹாட் கூறுவதுவழக்கம்.

தான் விரும்பினும் விரும்பாவிடினும் ஒவ்வொருவனும் ஒருவாறு ஒரு தொழிலாளியே.

நம்மனைவர்க்கும் செயற்பால கடமைகளும் காரியம் நிர்வகிக்க ஓரில்ல மும் ஒழுங்குசெய்யச் செலவுகளும் உள. பெருவிஷயங்களைப்போலச் சிறு விஷயங்களும் சிலசமயங்களிற் றீங்கு விளைப்பனவுமாம்.

நல்லவேளையாய் வியாபாரங் கைகூடுதல் கூரிய புத்தியினும் சாதாரண வறிவு கவலை கவனம் இவைகளை அதிகமாய்ச் சார்ந்துளது. 'கடையை நீர் வைத்துக்கொண்டால் கடையும்மை வைத்துக்கொள்ளு' மென்றொரு கர்நா டகப் பழமொழியுமுளது. அதேகருத்துள்ள கதையொன்றை ஜெனுபனும் கூறுகின்றார்.

"பாரஸீக தேயத்தரசன் தனது நேர்த்தியான குதிரையைக் கூடிய சீக்கிரத்தில் மிக்க கொழுப்புடையதாக்க விரும்பி அத்தகைய விஷயங்களில் வல்லோரென நினைக்கப்பட்டிருந்தவருள் ஒருவனைக் கேட்க அவன் 'அதன் எஜமானன் கண்ணே' யென்றான்"

தொழிலுக்குரிய பழக்க வழக்கங்களிற் பயிறன் மிகவு மின்றியமையா தது. சில நாட்கள் முன்னமே தான் என் நேசரில் கெட்டிக்காரனொருவன் நல்ல திறத்தினரிலும் தூயகுணத்தினரிலும் வாழ்க்கையின்கண் வெற்றி பெருத்தனக்குத் தெரிந்த பலரைப் பற்றியும் யோசிக்குமிடத்து அடிக்கடி அவர் தவறுதலின் காரணம் அவர் தாமதமாயும் நேரந்தப்பியும் பிறருடன் முழுமனதுடன் வேலைசெய்ய முடியாமலும் சிறு விஷயங்களில் விடாப் பிடியாயும் உண்மையாகவே நாம் 'தொழினலமன்மை' யென்று கூறுகிறபடி யே இருப்பதனாலேதான் என்றெனக்கு நிச்சயமாய்ச் சொன்னான்.

பெரு விஷயங்களிற்போலவே சிறு விஷயங்களிலும் முறைமையும் ஒழுங்கும் மிகவும் முக்கியமானவை. "தகுந்தஇடத்திற்றகுந்தபொருள்" என் பது பொன்போன்ற விதி. அவற்றின் காரியமானவுடன் பொருள்களை யவற்றினிடத்தில் வைப்பதிற் சிறு கவலையெடுத்துக் கொண்டாற் பிறகு உமக்கு வேண்டியபோது மிக்க கஷ்டத்தை நீக்கும்.

'ஒழுங்கின்மை யொரு குடியானவன் தன் களஞ்சியத்தில் நெல்லும், கோதுமையையும், கடலையையும் சேர்த்துப் போட்டுவிட்டுப் பிறகு தனக்கு அரிசியடையாதல் கோதுமையடையாதல் கடலைக்குழம்பாதல் வேண்டு

மானுல் அவற்றைத் தனித்தனியாக உபயோகப்படுத்திவைத்துக் கொள்ளாமல் தானியம் தானியமாகப் பிரிக்கவேண்டியது போலுமென்றெனக்குத் தோன்றுகின்றது' என்று ஜெனுபன் கூறுகின்றார்.

அதனை விளக்குதற்கு ஒருகப்பலை யுதாரணம் காட்டுகின்றார். கடலில் ஒரு புயற்காற்றடித்தால் வேண்டிய தின்னதென்று பார்க்கவும் பயன்படுத்த வருத்தமானதை எறிபவும் நேரமில்லை. ஏனெனிற் கடவுளர்கள் கவலையற்றோரைப் பயப்படுத்தித் தண்டிக்கின்றார்கள். தவறு செய்யாதவரை யவர்கள் அழிக்காவிடில் நாம் திருப்தியா யிருக்கலாம். எல்லாவற்றி னிடத்தும் நேரியகவனம் செலுத்துவோரைப் பாதுகாப்பரேல்அவரிடம் யாவரும் நன்றிபாராட்டற் பாலர். ஒவ்வொன்றையு மதற்குத் தக்கவிடத்தில் வைம்மின்.

தத்துவசாஸ்திரிகள் உண்மையாகவே அனைவரு மில்லாவிடினும் அரிஸ்டாடில் முதல் கார்லைல் வரையிலிருந்தவர்கள் வியாபாரிகளைப் பற்றிக் குறைவாய்ப் பேசியிருக்கின்றார்கள். யான் வியாபாரமே யிழிந்தது என்றும் பெரும்பாலும் தாழ்த்துவதென்றும் கூறுவேன். ப்ளேடோ தன்பிரஜாதிபத்தியத்தினின்றும் வியாபாரிகளைத் தள்ளிவிட்டார். அதில் வேலையாயிருக்க யாராவது விரும்பினுல் அன்னியர்களுக்கு இத்தகைய இழிந்த பதவியே ஆயினும் வியாபாரம் அவசியமாய்ப் பலரது வேலையாயிருக்கவேண்டி யிருக்கின்ற தாதலாற் குணத்தினிடம் அவர்கள் அதிகாரம் அவசியமாய்த் தீங்குவிளைப்பதாகவும் புத்திப் பயிற்சியொடு ஒவ்வாதும் இருந்தால் அதுமெய்யாகவே விசனகரமானது. அஃதற்றன்மை யதிர்ஷ்டமே. உண்மையாகவே தொழிலாளிகள் தம்காலத்திற் செலவழிக்கக்கூடியதையே பிறவிஷயங்களிற் செலுத்தலாம். ஆனுற்கலைஞர் கவிஞர்இவர்களினின்றும்மாத்திரம்உதாரணங்கள் எடுத்தால் நான் வானநூற் புலவனும் வியாபாரியுமான நாஸ்மித்தையும் சாவகாரியும் சரித்திரக்காரனுமான க்ரோட்டையும் காகிதம் செய்வோனும் புராதனக் கலைஞர் குழாத்தின் றலைவனும் ராஜரீகக் குழாத்தின்பொக்கிஷக்காரனுமாகிய ஸர்ஜே இவான்ஸையும் வியாபாரியும்பிறகுஜோதிர்த்தபுரியிற் பௌமிய நூற்புலவனுமாகிய ப்ரெட்ஸ்விச்சையும் சாவகாரியும் கவிஞனுமாகிய ப்ரீடையும் யான் கூறலாமானுல் சாவகாரியும்கணிதசாஸ்திரியும் பலவருடங்கட்கு ராஜரீக குழாத்தின் பொக்கிடக்காரனும் உபசபைத்தலைவனுமாகிய என் சொந்தத் தகப்பனையும் இன்னும் பலரையுங் கூறுவேன்.

பொருள்கள் மலிவாயிருக்கும் பொழுது வாங்கி அவை கிராக்கியாயிருக்கையில் விற்பதற்குக் கார்லைல் உறுதியாக ஆக்ஷேபித்தார். விளக்க முடியாத ஏதோ ஒருவழியால் நாம் பருத்தியின் குறைந்த விலையை நிச்சயிக்க வேண்டு மென்றும் தற்காலத்துக்கு நாம் பருத்தி விலையைக் குறைப்பதற்குக் கவலைப்படவில்லை என்று கூறவேண்டுமென்றும் மற்ற ஜனங்களிலும் குறைந்து விற்கக்கூடாதென்றும் கூறுகின்றார். 'சகோதரர்காள்! நாம்

குறைத்து விற்கவேண்டாம் நாம் அவர்களைப்போலவே விற்போம்' இஃது சாத்தியமா யிருப்பதே யன்றி வலியற்றதாகவு முளது. நாம் குறைந்த பருத்தி சாமான் விற்றால் குறைந்த உணவு வாங்கவேண்டும். கார்லைல் குறைந்த விலைக்கு அதிகம் விற்கலாம் என்றெண்ணிக் கொள்ளுகின்றார். ஆதலின் அவர் விதிப்படி நடந்தால் மனிதர்உடைவேண்டியிருப்பார். ஆனாற் குறித்த விலை கொடுக்க முடியாதிருப்பார். ஆனாற் குறைச்சலா யெடுத்துக்கொள்ள முடியும். ஆயினும் அவர் நாம் அதை மறுத்துப் பிறருடையையும் உணவையும் கைக் கொள்ளுமாறு செய்கின்றனர். நீர் மலிவாய்க் கொண்டுவரக் கூடியவற்றைக்கொடுத்து உம்மால்முடியாததை வாங்கிக்கொள்வதே வியாபாரத்தின் மூலநிலை. மலிந்துழிவாங்கி அருகிய வழி விற்பது வியாபாரத்தின் முக்கிய விதியாயிருப்பதே யன்றி எல்லாவற்றினும் சிறந்தது. ஏனெனில் லங்கனஞ் செய்வதில் நீர் தம் விளைச்சலை விற்க அதிகமாய் விரும்புவோரிடமிருந்து வாங்க உம்சாமான்களை யதிகமாய் விரும்புவோர்க்கு விற்கின்றீர்கள். வேறெவ்வழியும் கொல்லன் மறுகிற் ஊசிவிற்றல்போலப் பயனற்றதாம்.

மனிதரில் மிகப் பெரியோரும் இன்பமுடையோரும் நன்மைவாய்ந்தோரும் மிக்க வறியோரா யிருந்திருக்கின்றார்கள். வேர்ட்ஸ் வோர்த்தும் அவன் சகோதரியும் பல வாண்டுகட்கு வாரம் முப்பது ரூபாய் வருவாயை வைத்துக்கொண்டு ஜீவனம் செய்துவந்தார்கள். அதுவும் அவர்கள் மிக்க இன்பகரமா யிருந்தவேளைகளுளொன்றே. [சத்திமுத்தப்புலவரும் வறுமைக் கடலிலாழ்ந்து வருந்திய தன்மையாவரும் அறியகிற்பர். 'நாராய், நாராய், செங்கால் நாராய்'' என்ற பாடலும் அதனை வலியுறுத்து மாறறிக.]

நீர் செல்வவானா யிருக்கவேண்டு மென்று விதிக்கப்படாவிடின் சேர்க்கையும் பிரியமும் ஒரு வீடு போன்ற இடத்தையும் சிறிய குடிசையையும் ஒருலகம் போலாக்கி விடும்.

சருக்கை-வரதாச்சாரியன்.

---

## பேக்கனார் சிற்றுரை.

---

### 19-வது துரைத்தனத்துத் தலைமை.

இனிமேலடையவேண்டியது அதிகமாயில்லாமல் ஏற்கனவே கிடைத்திருக்கும் மிகுதி நீங்குமோ என அஞ்சும் நிலைமை மிகவும் துன்பம் செய்யும். துரைத்தனத்துக்கு தலைமை வகிக்கிறவர் நிலைமை இப்படிப்பட்டது. நாட்டில் முதன்மையராதலின், கோரவேண்டிய விஷயம் விசேஷமாயில்லை. அதினாலேயே அவர்கள் புத்தி மெலிவுறுா், அன்றியும் தமது உடைமைகளுக்கு

நஷ்டம் வரலாமோ எனப்பலவழியில் தாமாய் திகிலடைந்து, உள்ளம் குழம்பி புத்தி தத்தளிக்கும். திகில் விசேஷப்பட்டு மற்ற எண்ணங்களை ஒழுங்காய்க் கொண்டுபோம்படியான பேரவா ஒன்று இல்லாது இருக்கும். எவருடைய மனதையும் அறிவது கஷ்டமாதலின், "அரசர் உள்ளம் குறிப்புக்கு அகப்படாது" என்று கிறித்தவ வேதத்தில் பிரமாணம் ஏற்பட்டு இருப்பதற்கு மேலே கூறிய தத்தளிப்பே ஒரு காரணமாம், சில அரசர்கள் தமக்காகச் சிலகோரிக்கைகளை கற்பித்துக்கொள்வார்கள், அற்பகாரியங்களில் ஆசை வைத்துக்கொள்வர். ஏதோ ஒரு கட்டடமோ அல்லது புதிய சபையோ, ஏதோ ஒரு ஆளைஉயர்த்துகிறதோ,ஏதோ ஒருவித்தை,தம்கைவேலை இவற்றில் புகழ்பெற வேண்டுமென்றே, தாமாய் கருதுவர்ரோமபுரியில் நீரோ (Nero) சக்ரவர்த்தி ஹார்ப் (harp) வாத்தியம்வாசிக்கமுயன்றார்டாமிஷியன் (Domition) அம்பு எய்வதில் குறிப்புப் பிசகாதிருக்கப் பாடுபட்டார். காரகல்லா (Caracalla) வண்டியோட்டுவதில் திறமைக்காக ஆசைப்பட்டார். இப்படி எவ்வளவோ உதாரணஞ் சொல்லலாம். சாதாரண ஜனங்களுடைய புத்திக்கு எட்டாத சங்கதி ஒன்றுண்டு. அதாவது இம்மைப்பயன் விசேஷமாய் ஏற்கனவே கிடைத்து, அதற்குமேல் ஓங்க இடமில்லாமல் இருப்பதைவிட சொற்ப இம்மைப்பயன்களும் இனிமேல் கிடைக்கவேண்டிய ஸ்திதியில் இருந்து அதற்காகப் பாடுபட்டு, அவைகளை கெலிப்பதில் மனதுக்கு உவப்புஜாஸ்தியா யுண்டாம். இதற்கு இன்னும் பல உதாரணங்களுள. முதல் முதலில் எல்லாம் தமக்கு அனுகூலமாய் முடிந்த எத்தனை அரசர்களோ, முழுதும் அவ்வாறு அனுகூலம் சம்பவிப்பது அசாத்தியமாதலின், பிற்பாடு பிரதிகூலங்கள் நேரிடவே, வீண் திகில் பட்டு, சிந்தை யழிந்தனர். மஹா அலக்ஸாண்டரும் (Alexander the great),டையக்கிளிஷியனும் (Diclesion) நாமறிந்த ஐந்தாவது சார்லஸ் (Charles V), இன்னும் பலரும், இதற்கு இசைந்த உதாரணமாவர். மேன்மேலும் ஏறிப்போன ஒருவர்க்குத் தடை நேரிடின், தம்மனதுக்கே ஒப்புதலற்று, அவர் சொரூபம் தோன்றாமல் மாறுவர்.

துரைத்தனத் தலைமை நடத்துவதில் பக்குவம் எப்பேர்ப்பட்டது என்றால், பக்குவா பக்குவங்களைக் கலந்துபோவது அருமையாம். பக்குவமான நடையிலும் பல வழிப்பட நடத்தவும், அபக்குவத்திலும் பல வழிப்பட நடத்தவும் வேண்டிவரும் சமயத்துக்குத் தக்கபடிப் பல வழிப்பட நடத்தலில் பிழையில்லையெனினும், சமயங்களுக்கு விரோதமாக, வழிப்பாடுகளை மாற்றுவது பிழையேயாம். வெஸ்பாஸியன் (Vespasion) கேட்டகேள்விக்கு, அப்பல்லோனியஸ் (Apollonius) சொன்னபதில் ஏற்றது. நீரோ சக்கிரவர்த்திக்கு(Nero) கெடுதி என் நேரிட்டதென்றார். "ஹார்ப் (harp) வாத்தியம் வாசிப்பதில் ஸ்தானங்கள் அறிந்து விரல்களை அழுத்தத் தெரிந்தவர்தான், துரைத்தன விஷயத்திலோ சில சமயங்களில் தந்திக்களைக்

கடுமையாய் மீட்டுவர், சில சமயங்களில் அவற்றை அதிகமாய்த் தளர்த்துவர் எனப்பதில் சொன்னார். அப்பேச்சு உண்மைதான். அதிகாரிகள் சமயங்களில் விசேஷ கண்டிப்பாயும் மற்ற சமயங்களில் ஊழலாயும் இருப்பதைப் போல் அதிகாரத்தோரணைக்கு இடஞ்சல் மற்றெதுவும் அவ்வளவு செய்ய மாட்டாது.

இக்காலத்து அரசர்களுடைய விவேகமான நடத்தையை எடுத்துரைக்கும் பட்சத்தில், ஆபத்துகள் நெருங்கினபின் அவற்றைவிட்டு சாமர்த்தியமாய் அவர்கள் விலகினதாயும், ஆபத்துகளை கொஞ்சகாலம் வரைக்கும் ஒதுக்கினதாயும், தெரிய வருமே ஒழிய, அவைகள் எப்பொழுதேனும் வாராதிருக்கத் தகுந்த நற் சிந்தனைகள் செய்ததாய் தெரியவராது. ஐயோ பாவம்! அதிருஷ்டவசங்களுக்கு அவர்கள்தான் எப்படி எதிர்நிற்கக்கூடும். ஆனாலும் ஆபத்துக்களுக்கு வழி ஏற்படாமல் நம் கூடியவரையில் நாம் ஜாக்கிரதைப்படலாம். திடீரென்று நெருப்புப் பற்றுவதை யார் தடுக்கலாம். எந்தப்பக்கத்திலிருந்து நெருப்பு புறப்படுமோ எவர்தான் சொல்லலாம். அரசாளுகிறவர் வேலைகளில் ஆபத்துக்கள் பலமாகவும் பலவாகவு மிருந்து அரசாளுகிறவருடைய சொந்த புத்தியில் ஆபத்துகளுக்கு வகையுண்டு. ஏனென்றால், டாஸிடஸ் (Tacitus) சொல்லுகிறதுபோல் அரசர்கள் கொள்ளும் கருத்துக்கள் பெரும்பான்மையாய் ஆச்திரப்பட்டும் முன்பின் விரோதமாயும் இருக்கும். விரைவாய் காரியம் முடியக்கோருவது தலையார்க்கு இயல்பான பிழையாம், உபாயங்களைச் செலுத்த சாவகாசப்படுமே யென்று பொறுமையை ஆள அவர்க்குத்தெரியாது.

அயல் அரசர்களிடத்திலும், தம் பெண்சாதி பிள்ளைகளிடத்திலும் கோயிலாளும் குருக்கள் பாதிரிமாரிடத்திலும் நாட்டுப்பிரபுக்களிடத்திலும் கீழ்த்தரப்பட்ட பிரபுக்களிடத்திலும் வர்த்தகரிடத்திலும் குடிகளிடத்திலும் ராணுவத்தாரிடத்திலும் அரசர்கள் நடந்து கொள்ளும்முறைவேறுபடும், ஜாக்கிரதையாய்க் கண்காணிப்புடன் ஊன்றி அரசர்பார்க்கப் பெறாராயின் இவர்கள் எல்லாராலும் ஆபத்துக்கள் நேரிடலாம்.

1. **அயல் அரசரிடத்தில் ஜாக்கிரதையா யிருத்தல்:**—பொது விதி சொல்லத்தரமில்லை. ஏனென்றால் சமயங்கள் வெவ்வேறுபடும். ஆனால் ஒரொழுக்கத்தை மாத்திரம் பொதுவாகயெடுத்துக்காட்டலாம். அதாவது:—அரசர்கள் மற்ற அரசர்களுடைய நடவடிக்கையின்பேரில் விழிப்பாயிருக்கத்தவறலாகாது, அதிக சீமையை அடைந்தாகிலும் வியாபாரம் விசேஷப்பட்டாகிலும் சீமையை அநியாயமாய் ஆக்கிரமித்தாகிலும் இன்னும் எப்படியாகிலும், இந்நேரத்தில் உள்ளதைவிட தமக்குகெடுதி விளைவிக்கும் சாதனங்கள் மற்ற அரசர்கள் அடையாதபடி, எப்பொழுதும் கண்ணோட்டமாய் இருக்கக்கடவர், இப்பேர்பட்ட சந்தர்ப்பங்கள் நேரிடாமல் முன்னேக்குப் பட்டுக்காப்

பது ஸ்திரமான மந்திராலோசனை சபையார்கடமை. ஆங்கிலேய நாட்டில் எட்டாவது ஹேன்றியும் (Henry VIII). பிரான்சுதேசத்து முதலாவது பிரான்ஸிஸ்ஸும் (Francis of France), ஜெர்மனியில் சக்கிரவர்த்தியான ஐந்தாவது சார்லஸ்ஸும் (Charles V of Germany) இம்மூவர் நாட்டாமை ஐரோப்பாவில் செல்லுகையில், எந்த ஒருவர்க்கு ஒருகுழிநிலம் கிடைத்தாலும் மற்ற இருவரும் இணங்கி அதனைத்தடுப்பர், யுத்தத்திற்கும் துணிவர், பொருள் லக்கியம் கருதி சும்மா இரார் இட்டலி (Italy) க்ஷேமப்பட்டதும், இப்படித்தானென்று குக்யார்டைன் (Quicciardine) சொல்லுகிறார். நேபில்ஸ் அரசர் பேர்டினண்டோவும் (Ferdinando of Naples)ப்ளாரன்ஸ் (Florence), மிலன் (Milan) இவற்றிற்குத் தலைமையர் லோரன்சியஸ்ஸும் (Lorenzius) லூடேவிகஸும் (Ludovicus) இணங்கி இத்தாலியா க்ஷேமப்பட்டது. அயல் அரசரால் கெடுதிநேரிட்ட பின்னர்தான் யுத்தம் தொடக்கலாம் என்பது மத்தியகாலத்துப் பள்ளிக்கூடத்தினர் சிலருடைய அபிப்பிராயம் ஒப்பல்ல, ஏனெனின், ஆபத்துக்கு இடம் உண்டாம்படியாகுமுன் முன் நடவடிக்கை இருந்து,அடிதடி நேரிடாவிடினும் யுத்தத்துக்கு புகுவது முறைப்படும்.

2. **அரசாளுகிறவர் பெண்சாதிமாரிடத்தில் நடந்துகொள்வதைப் பற்றி:**—ராணிமார் கொடியர்பலர் இருந்துளர். தம் கணவர்க்கு விஷமிட்ட தாய் லிவியாவுக்கு (Livia) பேருண்டு. சூலிமான் (Sulyman) அரசர் பெண்சாதி ராக்ஸ்லானே (Roxolana) என்பவர், தம்கணவரது சீரிய இராஜகுமாரன் சுல்தான் முஸ்தாபா (Sultan Mustapha) வைக்கொன்று அவருக்குத் துன்பம்செய்து, பிற்பாடு குழப்பம் உண்டாக்கினள். இங்கிலாந்தில் இரண்டாவது எட்வர்ட் (Edward II) என்பருடைய ராணியர்தம் கணவரைத்துரைத்தனத்தினின்று நீக்கிகொல்வதற்கு முக்கியமாய் ஏற்பட்டனர். தன் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளைத்துரைத்தனத்தில் நாட்டவேண்டு மென்றுவது ராணிமார்கள் அவிசாரிகளாய் போய்விட்டாவது, இப்பேர்ப்பட்ட ஆபத்துக்கள் நேரிடும்.

3. **ராஜவம்சத்து குழந்தைகளிடத்தில் நடந்துகொள்வது:**—இவ்விஷயத்தில் எத்தனையோ துன்பங்கள் நேரிட்டதுண்டு. குழந்தைகள்பேரில் பெற்றூர் சந்தேகப்படுதலினால் தீங்கே நேரிடும். மேலே சொல்லியபடி முஸ்டாபாவை (Mustapapa) க்கொன்றபின் சூலிமான் (Sulyman) வம்சத்தினர்க்குப் பேர்கெட்டுப்போய், நாளைக்கும் தர்க்கியில் (Turkey) புது அரசன் ஏற்படும்போது, அவர் சந்ததியரல்லர் என்று நினைக்கப்படுகிறார்கள். இரண்டாவது செலிமஸ்ஸை (Slymus) பொய் சந்ததியாக சொல்ல இல்லையா? கிரிஸ்பஸ் (Crispus) என்ற தன்குமாரர் விசேஷ இடக்கராயிருந்தபடியால் தகப்பனாரான மகா கான்ஸ்டான்டைனஸ் (Constantinus the great) தம் குமாரரைக்கொன்று அதனால் தம் வம்சத்தினருக்கு ஆபத்

து உண்டாய் கான்ஸ்டன்டைனஸ் (Constantionus) கான்ஸ்டன்ஸ் (Constanci) என்கிற பிற்பட்ட குமாரரிருவரும் துர்மரண மடைந்தார்கள். அவர்களுக்கும் இளைஞரான கான்ஸ்டாஷியஸ் (Constantius) இனுடைய கதியும் துர்மரணமெனலாம், நோய் கண்டிறந்தவராயினும், அவர்மேல் ஜூலியானஸ் (Julianus) படையெடுத்த பின்னரே இறந்தாராதலின் மாஸிடன்னில் இரண்டாவது பிலிப்(Philip II of Macedon)தன் குமாரர் டெமிடிரியஸை (Demetrius) கொன்றதின்பேரில் அவருக்கே ஏக்கம் பிடித்து ஏக்கத்தினுலிறந்தார். இன்னும் எத்தனை உதாரணங்களோ எடுக்கலாம், குமாரர்களின்பேரில் அவநம்பிக்கைப்பட்டு பெற்றார் க்ஷேமமடைந்ததற்கு உதாரண எத்தனையானுலும் அகப்படும். பாஜசட்(Bagazet) டுக்கு விரோதமாக செலிமஸ்ஸும் இங்கிலாந்தில் இரண்டாவது ஹென்றிக்கு (Henry II)விரோதமாக அவர் குமாரர் மூன்றுபேரும் வெளிப்படையாக யுத்தத்துக்கு புறப்பட்டு விட்டபின் பெற்றவர் அபிமானம் துறந்தது கெடுதியாக முடியவில்லை.

4. **கோயில் குருக்களிடத்தில் நடந்து கொள்வது**:—குருக்கள் மார்க்கு அகம்பாவம் பிடித்தால், அதனுல் அபாயம் நேரிடலாம். கான்டர்பரி (Canterbary) மடத்தில் ஆன்செல்மும் (Anselm) தாமஸ் பெக்கட்டும் (Thamas a Backet) பீடம்பெற்று அரசரை பெதித்தனர். அவர்களுக்கு எதிர்ப்பட்ட அரசர்களாகிய வில்லியம்ரூபஸ்(William Rufus)ஸும் முதலாவது, இரண்டாவது, ஹென்றிகளும் (Henry I & Henry II)வலிவான நெஞ்சினராதலின் ஈடுகொடுத்தனர். கோயில் குருக்கள்மார் எனும் ஒரு வகுப்பினர் இருக்கின்றமையினுல் தப்பு ஒன்றும் நேரிடாது. குருக்கள்மார்க்கு வெளியரசர் ஒத்தாசை கிடைத்ததனுலும், நாட்டிலுள்ள அரசர்களாலாவது பிரபுக்களாலாவது நியமிக்கப்படவேண்டுவதன்றி மகாஜனங்களால் குருக்கள்மார் நியமிக்கப்படும்படிபாய் இருந்ததனுலும் வித்தியாசங்கள் நேரிடும்.

5. **பிரபுக்களிடத்தில் நடந்துகொள்வது**:—பிரபுக்களை நெருங்கவிடாமல், விலக்குவது பிசகல்ல. ஆனுல் அவர்களை மிகவும் தாழ்த்துவதில் அரசாளுகிறவர் உத்தரவாதம் தளர்ந்து தம் அதிகாரம் உயர்கிற ஒருபிரயோசனம் உளதாயினும் தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்கிற விஷபத்தில் சாதகம் குறைவுபடும், அரசர்க்குக் காவலும் குறைவுபடும். இங்லண்ட் அரசர் ஏழாவது ஹென்றியின் சரித்திரம் எழுதியிருப்பதில் நன்குகாட்டியதாவது, பிரபுக்களை அவர் தாழ்மைப்படுத்தியதின்மேல், அவர துரைத்தனத்தில், கஷ்ட நிஷ்டூரங்கள் மிகுந்தன. பிரபுக்கள் அவர் அரசாட்சிக்கு விரோதம் செய்யாவிடினும், அவர்க்கு ஒத்தாசை செய்யாது விலகினர், எல்லாவேலையையும் தாமே ஏற்று முடிக்கவேண்டியராயினர்.

6. இரண்டாம் படிப்பிரபுக்களிடத்தில் நடந்து கொள்வது:—இவர்களால் கெடுதி நேரிடமார்க்கம் காணோம். இவ்வகுப்பினர் பல விடங்களிற் பிரிந்து கிடப்பர். பேச்சில் எப்பொழுதும் சர்வதுதாட்டியாய்ப்பேசுவர். அதனால் என்னகெடுதி? ஒன்றும் இல்லை. முதற்படிப் பிரபுக்களுக்கு, இவ்வகுப்பினர் போட்டியாவர். அவர்கள் மிஞ்சினால், இவர்களைக்கொண்டு அடக்கல் கூடும். குடிகளை நேரே ஆள்கிறவர்களாதலின், குடிக்கலகம் நேரிடும் வேளைகளில் அவர்களை அடக்கிக்கொண்டு போதற்கு இவர்கள் உதவுகிற மாதிரி யாரும் உதவமாட்டார்கள்.

7. வர்த்தகர்கள்:—வர்த்தகர்கள் உடலில் நரம்பு ஒத்தவர் ஆவர். வர்த்தகர்கள் செழிக்காவிடின், நாடானது கைகால் அவயவங்கள் இருந்தும் நரம்பில் இரத்தம் அற்ற உடம்பை ஒக்கும். வர்த்தகர்கள் பேரில் வரியைச் சுமத்துவதினால் அரசர்க்கு நன்மை இராது. வரிபோட்டதாய்ப் பேர் உண்டாகுமே தவிர வரியால் மொத்த வரும்படி கீழ்நோக்கும்.

8. குடிகளாம் மகாஜனங்கள்:—இவர்களால் கஷ்டம் விளையாது. யாராவது விசேஷ சாமர்த்தியத்தினர் அவர்களுக்குத் தலைமையைவகித்து நடத்தினால் என்னவோ தெரியாது. அவர்கள் சமயத்துக்கும் ஒழுக்கத்துக்கும் பிழைப்புக்கும் விரோதம் அரசரால் நேரிட்டால், சீமையில் கலகம் ஏற்படும். அது அரசுக்குக் கெடுதியாம்.

9. இராணுவத்தினர்:—இவர்கள் ஒன்று சேர்ந்து பிரத்யேகமான ஒரு கூட்டினராய் விவகாரப்பட்டு, அப்போதைக்கப்போது பொருள் இனாம் பெறல் வழக்கப்பட்டிருந்தால், நாட்டுக்குக்கெடுதியுண்டாம். ரோமபுரிச்சரித்திரத்தில் ஜானிஸரியர், ப்ரிடோரியர் எனப் படையர் ஏற்பட்டு வம்புசெய்யவில்லையா? தண்டுகளைப் பலதலங்களில் பிரித்துவைத்து, அவர்களுக்குத்தக்க சேனைத்தலைவர்களை நியமித்து, அவர்களைச் சரிவரக் காத்து பழகுவித்து, பொருள் இனாம் கொடுக்கிற வழக்கமின்றிக் கொண்டுபோவதில் நாட்டின் காவலுக்குக் குணமே யொழிய, தீங்கு காணோம்.

நவக்கிரகங்களுக்கும் அரசர்களுக்கும் ஒற்றுமை சொல்லலாம். நவக்கிரகங்களுக்கும் வழிபாடு இயற்றுகின்றனம், அரசர்களுக்கும் அப்படியே. நவக்கிரகங்களுக்கும் ஓய்வு இல்லை. அரசர்களுக்கும் அப்படியே ஓய்வு இல்லை. அரசர்களைப்பற்றிய சங்கதிகளைக் கடைசியாக இரண்டேபேச்சாய் எடுத்தாளலாம். "அரசரே, நீர் மானிடர்தான். அரசரே, நீர்தான் தெய்வம், கடவுளின் ஸ்தானத்தில் இருப்பவர்நீர்." முதற் பேச்சை நினைப்பில்வைத்துப் போனால், பேராசையடையீர். இரண்டாம் பேச்சை நினைப்பில் வைத்துப்போனால், புத்திக்கு வந்தபடி கடுந்துரைத்தனம் நடத்துவதைக்கடிவீர்.

டி. ஆர். இராமநாதையர்.

# நாடகவிலக்கணச்சுருக்கம்

## முதற்பாகம்.

நாடக மென்பது நாட்டியமே பிரதானமாயுள்ள கிரந்த விசேஷமாகும். அது பார்க்கத் தகுந்ததாதலின் ரூபமென்றும், ராமர் முதலியோரது அவஸ்தையை (ரீதியை) தன்னிடத்துக்கொண்டு நடன் வர்த்திப்பது உண்டாதலின் ரூபகம் என்றும் சொல்லப்படும்.

இங்கு நாடகத்திற்கு உபகாரகமாகிய நாட்டியத்தின் தன்மை (ஸ்வரூபம்) முதலில் விவரிக்கப்படுகின்றது. அபிநயத்தினாற் சிருங்காராதி ரஸங்களுக்கு ஆசிரயமாகிய தீரோதாத்தர் முதலாகிய நாயகர்களது குறிப்பை யநுசரிப்பது (அநுசரித்து நடப்பது) நாட்டிய மெனப்படும்.

அபிநயமென்பது, அவயவங்களை யசைப்பது முதலாகியவற்றினால் தெரிவிக்கக்கூடிய அர்த்தங்களைத் தெரிவித்தல். அஃது ஆங்கிகம், வாசிகம், ஸாத்விகம், ஆஹார்யம் என நான்கு வகைப்படும். ஆங்கிக மென்பது அங்கங்களினாலமைந்தது; வாசிகம், வாக்குகளினாலமைந்தது; ஸாத்விகம், ஸத்வத்தினாலமைந்தது (இங்கு, ஸத்வம் எனின், ஒருவருக் குண்டாகிய சுகம் துக்கம் முதலியவை தனக்குண்டாகியதுபோல் பாவிக்கும் மனதுடைமை); ஆஹார்யம், ஆபரணம் முதலியவற்றா லமைந்தது.

நாட்டியப் பிரஸ்தாபத்தை யநுசரித்து நிருத்தியமும் நிருத்தமும் நிருபிக்கப்படுகின்றன.

கேவலம் பாவத்திற்கு இடமாயிருப்பது நிருத்தியமாம். பாவம் என்பது ரஸாபிஞ்ஞான யோக்யதை; அஃதாவது, ரஸத்தைக் கிரகிக்குமறிவு. சாவ்யத்தினாலேனும் அபிநயத்தினாலேனும் தெரிவிக்கப்படும் ராமர் ஆதியாயுள்ள தீரோதாத்தர் முதலான நாயகர்களுடைய சுகம் துக்கம் ஆகிய இவைகளின் அநுபவத்தினாலுண்டாகிய வாஸனா ரூபமான ஸம்ஸ்கார மெனப்படும் ஸபையோரது விகாரமே பாவமென்று சிலர் கூறுவர்.

தாளத்திற்கும் லயத்திற்கும் இடமானது நிருத்தமாம். தாளமென்பது பாட்டுப்பாடும்பொழுது அதற்குத் தகுந்தபடிக் கைகளைத் தட்டுதல் முதலியன. லயமென்பது நிருத்தியம், கீதம், வாத்தியம் ஆகிய இவைகளின் சமபாவம்.

"ந்ருத்" தாதுவிற்குக் "காத்திரவிக்ஷேபம்" (தேகத்தையசைத்தல்) அர்த்தமாம். ஆகையால், சிருங்காரம் முதலிய ரஸமே விஷயமாயுள்ளதும், அங்கங்களின் அசைவு முதலியவற்றினாலாகிய வபிநயமே அதிகமாயுள்ளதுமாயிருப்பது "நிருத்திய"மெனப்படும். நிருத்தியம், நிருத்தம் ஆகிய இவ்விரு பதங்களும் ஒரேதாதுவினின்றும் பிறந்தமையால் காத்திரவிக்ஷேப (தேக அசைவு) அர்த்தத்தில் இரண்டும் சமானமேயாம். ஆயினும் அநுகாராத்மகத்துவத்தினால் (அனுகரித்தல் உளது ஆனதுபற்றி) நிருத்தியமென்பது நிரு

த்தத்தினின்றும் பிறிதாயிற்று.

"நட" என்னுந்தாதுவினுக்குக் "கொஞ்சம் அசைவு" என்று அர்த்தமாகின்றமையால், ரஸவிஷயமும் ஸாத்விகாபிநய விசேஷமும் பொருந்தியிருப்பது "நாட்டிய" மெனப்படும். அன்றியும், வாக்கியார்த்தாபிநயம் பொருந்தியது நாட்டியமாம்; பதார்த்தாபிநயம் பொருந்தியது நிருத்தியமாம். இதுவே நாட்டியம், நிருத்தியம்ஆகிய இவ்விரண்டினுக்குமுள்ள வேற்றுமையாம்.

பதார்த்தாபிநயமே ஸ்வரூபமாயுள்ள நிருத்தியம் 'மார்க்க' மென்றும், அஃதல்லாத நிருத்தம் 'தேசி' யென்றும் சொல்லப்படும். மேற்கூறிய நிருத்தியம், நிருத்தம் ஆகியவிரண்டும் மெதுவாய் ஆடப்படுமாயின் 'லாஸ்ய' மென்றும், (கூத்துமிக்கு) பலமாய் ஆடப்படுமாயின் 'தாண்டவம்' என்றும் சொல்லப்படும்.

இவ்வகைப் பேதங்களமைந்த நிருத்தியமும் நிருத்தமும் நாடக முதலியவற்றில் உசிதாநுசாரமா யுபயோகிக்கப்படுகின்றன. வஸ்து (கதை), நேத (நாயகன்), ரஸம் (சிருங்கார முதலிய ரஸம்) ஆகிய இவை பேதிப்பதனால் ரூபகமானது பத்துவிதமாயேற்படுகின்றது. அப்பத்து விதங்களாவன :—1. நாடகம், 2. ப்ரகரணம், 3. பாணம், 4. ப்ரஹஸநம், 5. டிமம், 6. வ்யாயோகம், 7. ஸமவாகாரம், 8. வீதி, 9. அங்கம், 10. ஈஹாம்ருகம் என்பவையாம். இவற்றி லோவ்வொன்றிற்குமுள்ள வித்தியாஸம் வஸ்துபேதத்தினாலும், நாயகபேதத்தினாலும், ரஸபேதத்தினாலும் உண்டாகின்றதென்பது தாற்பரியமாம்.

ரூபகத்திற்குச் சரீரம்போன்றதாகிய வஸ்து (கதை) 'ஆதிகாரிகம்' என்றும் 'ப்ராஸங்கிகம்' என்று மிருவகைப்படும். அந்த வஸ்து 'விருத்தம்', 'இதிவிருத்தம்' என்றுஞ் சொல்லப்படும். மேற்சொல்லிய இரண்டு விதமான வஸ்துக்களில் ஆதிகாரிகவஸ்து முக்கியமானது. அது ராமாயணத்தில் சீதையின் விருத்தாந்தம் போன்றது. அந்த முக்கியமான கதைக்கு அங்கமாயுள்ள கதை 'ப்ராஸங்கிகம்' எனப்படும். பிராஸங்கிகம் = பிரஸ்தாபவசத்தினால் வந்தது. இது ராமாயணத்தில் ஸுக்ரீவாதிகளின் விருத்தாந்தத்தைப் போன்றது.

முக்கியமாகிய அந்த ஆதிகாரிக வஸ்து அதிகாரியினாலேனும் அதிகாரத்தினாலேனும் நிறைவேற்றத்தகுந்தது; அஃதாவது பயன் வெளியாகும் வரைக்கும் நிறைவேற்றத்தகுந்த தென்றுபொருளாம். அதிகாரம் = பயனுக்குரிமை; அதிகாரி = அதிகாரமுடையவன். முக்கியவஸ்துவினுக்கு அங்கமாகிய பிராஸங்கிகமென்பது, ஒருகாரியத்தினிமித்தமாய்ப் பிரவர்த்திக்குங் காலத்தும் தன்காரியம் நிறைவேறுவதாயுள்ளதாகும்.

அந்தப் பிராஸங்கிக வஸ்துவென்பது 'பதாகை' என்றும் 'ப்ரகரி' என்று மிருவகைப்படும். அநுபந்தத்துடன் கூடியது, அஃதாவது, ராமாயணத்தில்

ஸுக்ரீவாதிகளின் விருத்தாந்தத்தைப்போல முக்கியகதையின் ஸம்பந்தாநுவர்த்தனம் வெகுதூரம் வரையிலுள்ளது 'பதாகை' யெனப்படும். 'ஓரிடத்திற் சம்பந்தமுள்ளது, அஃதாவது, சிரமணாதிகளின் விருத்தாந்தத்தைப்போல யாதேனு மோரிடத்துக் கொஞ்சம் அநுவர்த்தனமுள்ளது 'ப்ரகரி' எனப் படும்.

பதாகையைப் பற்றிப் பிரஸங்கித்ததனால், இங்குப் பதாகாஸ்தானகம் சொல்லப்படுகின்றது.

பிரகிருதத்திலுள்ள கதையினுடன் திடீரென்று வந்து சேரும் கதையின் சரியான விவரணங்களடங்கிய விசேஷணங்களோடு அந்நியாபதேச வார்த்தையைக் குறிப்பது பதாகாஸ்தானக மெனப்படும். அந்நியாபதேசமென்பது பிரகிருதத்திலில்லாத வொரு அர்த்தத்தைக் காரணமாய்க் கொண்டு பிரகிருதத்திலுள்ள அர்த்தத்தைத் தெரிவிப்பதாம். இது, பிரகரண வசத்தினால், மேலே வரக்கூடிய அர்த்தத்தைத் தெரிவிப்பதில் பதாகையைப் போல் வர்த்திக்கின்றமையால் இதற்குப் பதாகாஸ்தானக மெனப் பெயர் வாய்த்தது. இந்தப் பதாகாஸ்தானகமானது அந்நியோக்தி (அந்நியாபதேச வார்த்தை) யினாலும், ஸமாஸோக்தி (பிரஸ்துதத்தில் அப்பிரமேயத்தைத் தோற்றுவிக்கும் வார்த்தை) யினாலும் இரண்டு விதமாகும். உதாரணம்:—

(1) **ரத்நாவளி:**—ஓ தாமரைக் கண்ணீ! எனக்கிது போகவேண்டிய சமயமாம்; நான் போகின்றேன். நீஸுப்தி யடைந்து என்னாலேயே பிரதி போதிக்கத்தகுந்தவளாவாய்," என்று தாமரைக் கொடியெனு மனைவியைத் தூங்கச்செய்வான் போல அஸ்தமஸ்தக நிவிஷ்டகரனான சூரியன் தோன்றினின்றான்.

தாமரைக்கண்ணீ=தாமரைப் பூக்களென்னும் கண்களையுடையவள்; தாமரைப் பூவைப்போன்ற கண்களையுடையவள், ஸுப்தியடைதல்=மூடிக்கொள்ளல், குவிந்து கொள்ளல், நித்திரைசெய்தல். பிரதிபோதித்தல்=விகஸிக்கச்செய்தல், எழுப்புதல். அஸ்தமஸ்தக நிவிஷ்டகரன்=அஸ்தபர்வத்தின் மீது சேர்க்கப்பட்ட கிரணங்களையுடையவன், எறியப்பட்டதனை லெடுத்து வைத்துக்கொள்ளப்பட்ட கைகளையுடையவன்.

(2) **அருணைக்கலம்பகம்,** பிரிவுவிலக்கல்.—

ஆரும்வி ரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாய்ப் பாடிய பாவலர் போலவே
நீருமரு ந்தமிழ் செப்பிடு நீர்மைய றிந்திவ ணேகுவீர்
மேருநெ டுஞ்சிலை யத்தனார் வீறரு ணாபுரி வெற்பரே."

(3) **ரத்நாவளி:**—"தடையில்லாத உத்களிகைகளினாலும், மிகவும் பிரஸன்னமான முகத்தினாலும், க்ஷணகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜ்ரும்பைகளினாலும், அதிகமான ச்வஸோத்கமங்களினாலும் ஆகிய ஆயாசத்தையு

டைய இந்த உத்பிரனலதையை, மன்மத வேதனையையடைந்த அன்னிய ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் பார்க்கின்ற நான் ராணிக்குக் கோபாவேசத்தினால் மிகவுஞ் சிவந்தமுகத்தை யுண்டாக்குகின்றேன்.

உத்கலிகை—வெளிவந்த மொட்டுகள்; உயர்ந்த கோரிக்கைகள். ஜரும்பை—விகாஸம்; கொட்டாவி விடுதல். சுவஸநோத்கமம்—காற்றினால் மேலே தள்ளப்படுதல்; மேல்மூச்சு விடுதல்.

ஆதிகாரிகத்துவத்தினாலும், இருவிதப் பிராஸங்கிகத்துவத்தினாலும் அந்தக்கதா சரீரம் (வஸ்து, அல்லது, கதை) மறுபடி மூன்று விதங்களாம்; அவையாவன.—1. பிரக்கியாதம், 2. உத்பாத்யம், 3. மிச்ரம்.

பூர்வகாலத்துக் கதைகளினின்றும் புராணங்களினின்றும் சங்கிரகிக்கப்பட்ட கதை பிரக்கியாத மெனப்படும். (மகாவீர சரித்திரம் முதலியவை). கவியினால் புதிதாய்க் கற்பிக்கப்பட்ட கதை உத்பாத்ய மெனப்படும். இதனைக் கற்பிதமென்றுஞ் சொல்லுவர். (மாலதீமாதவம் முதலியவை). மேற்சொல்லிய இரண்டு மடங்கியது, அஃதாவது, பிரக்கியாதமும் உத்பாத்யமுஞ் சேர்ந்தது, மிச்ர மெனப்படும்.

(இன்னும் வரும்)

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

## ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசம்.

1. ஞானமார்க்கத்தில் விவேகமும் வைராக்கியமு மில்லாமல் ஒன்றுஞ் சாத்தியப்படாது. விவேகமாவது சத்தியமாகிய கடவுளினின்றும் தோற்றமாகிய பொய்யுலகத்தைப் பிரித்தறிவதாம். வைராக்கியமாவது செல்வம் அதிகாரம் போகம் என்றிவற்றிற் பற்றின்மையாம்.

வைராக்கியம் பலவகைப்படும்; அவற்றுள் ஒன்று உலகத்துன்பத்தில் உண்டாகும் அதிதுக்கத்தினாற் பெறப்படுவது. ஆனால், இதனைவிட நல்லதான வைராக்கிய மொன்றுண்டு. அது உலகத்தில் அடையப்படும்நன்மைகளெல்லாம் பொய்யென்றுணரும் ஞானத்திலுதிப்பது. இந்த நன்மைகளும் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய தன்மையிலேயே யிருக்கின்றன. இவ்விதமாக எல்லாவற்றையும் அடைந்தும் ஒன்றையு மடையாதவனா யிருக்கிறான்.

2. உண்மை ஞானத்தை யடைவோர் தொகைமிகக் கொஞ்சம். பகவற்கீதையில் "ஆயிரத்திலொருவன் ஞானத்தையடைய முயற்சிக்கிறான்; அப்படி முயற்சிப்பவர் ஆயிரம்பேர்களி லொருவனே தான் குறித்த பொருளையடைகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஒருமனிதனுக்கு உலகத்தில் எவ்வளவு தூரம்பற்று இருக்கிறதோ, அவ்வளவுதூரம் ஞானமடைதல் கஷ்டமாயிருக்கிறது. எவ்வளவு அற்பம் பற்றோ, அவ்வளவுக்கு ஞானம் அவனுக்குச் சாத்தியமாகின்றதென்று சொல்லலாம்.

4. **ஞானநிலைப்பேதம் :**—பாவநிலை; பிரேமநிலை. ஸச்சிதானந்த வஸ்துவைத் தியானிக்கும்பொழுதோ அநுபவிக்கும்பொழுதோ வாக்கும் மனமும் மவுனமாகி நிற்கும் நிலை பாவநிலை. ஸச்சிதானந்த வஸ்துவாவது ஸத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்று குணங்கள் மட்டுமே அதற்கு உண்டென்று சொல்லக்கூடிய பரம்பொருள். ஜீவனால் (சாமானிய ஜனங்களால்) அடையக்கூடிய முடிவுநிலை பாவநிலையே.

5. **பிரேமநிலை :**—பிரேமை (கடவுளிடத்து வைக்கப்படும் பேரன்பு) சிலராலேயே யடையப்படுந் தன்மையது. அதனை யடைவோர்கள் மனிதர்களேயாயினும் அசாதாரண சக்திமான்களாய், தெய்வ சங்கற்பத்தால் விசேஷகாரியங்கள் நடத்திக்காட்டப் பிறந்திருக்கிறார்கள். தெய்வசக்திக்கும் தெய்வமாட்சிக்கும் பாத்திரர்களாகிய இவர்கள் ஒருவகுப்பினராய் வாழ்கின்றனர்.

ஈசுவர அவதாரங்களும், ஈசுவர அம்சங்களாகிய உயர்தரப் பக்தர்களும் இவ்வகுப்பைச் சார்ந்தவர்களாம்.

"பாவநிலை பழுக்காத மாம்பழம் பிரேமை பழுத்த மாம்பழம்." பிரேமை (ஈசுவரபக்தி) ஸச்சிதானந்தத்தைக் கட்டுவதற்காக பக்தர்கள் கையில் வைத்திருக்கும் கயிறுபோலாம். [பத்திவலையிற்படுவோன் காண்க—திருவாசகம்] பக்தன் ஈசுவரனைத்தன் கையில்வைத்து ஆட்டுகின்றான் என்று சொல்லும்படி யத்தனைபிடிப்பு இருவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுது ஈசுவரனை வாவென்று பிரார்த்தித்தாலும் அவர் வரக்கடமைப் பட்டிருக்கிறார்.

பாரசீகபுத்தகங்களில், "தசைக்குள்ளே எலும்பு இருக்கின்றது. எலும்புக்குள்ளே மச்சையிருக்கின்றது, மச்சைக்குள்ளே.................... எல்லாவற்றுக்கும் அடியில் பிரேமை இருக்கின்றது" என்று எழுதப்பட்டிருக்கின்றது.

6. பிரார்த்திப்பதெப்படி? உலகத்திலுள்ள விஷயங்களை வேண்டி நாம் பிரார்த்திக்கக்கடவோமல்லம். நாரதரைப் போலப்பிராத்திப்போம். நாரதர் ராமச்சந்திரரை நோக்கிக்கேட்டார் "இராமரே, உம்முடைய பாதகமலங்களில் பக்தி (அன்பு, வழிபாடு, சற்போத நீக்கம்) யை எனக்கு அருளும்". "அங்ஙனமே யாகுக" என்றார் இராமர், "ஆனால், வேறொன்றையுங் குறித்துக் கேட்க மாட்டீரா?" இதற்கு, நாரதர், "பகவானே, பிரபஞ்சத்தை மயக்குந் தன்மையதாகிய உம்முடைய மாயையால் நான் மயங்காமலிருக்கும்படி

கடாக்ஷிக்கவேண்டும்" என்று மறுமொழி புகன்றார். ராமச்சந்திரர் மறுபடியும் "அங்ஙனமாக; நாரதரே, வேறொன்றும் வேண்டாமா!" என்றார். நாரதர் "இல்லை, பகவானே, எனக்கு அவ்வளவேபோதும்" என்று உத்தரங் கூறினர்.

7. ஞானம் பல பேதப்பட்டு விளங்கும். முதலாவது லௌகிகர்களுக்குரித்தான ஞானம். இது போதுமானபடி பலமுடையதன்று. இதனை, ஓரறை நடுவில் இருந்து அவ்வறையை மட்டுமே பிரகாசப்படுத்தும் தீபவொளிக்குச் சமானமாகச் சொல்லலாம். பக்தனுடைய ஞானம் இதனினும் அதிக பலமுடையது. இதனை அறைக்கு உள்ளும் புறம்பும் உள்ள பொருள்களைக் காட்சிக்குப் புலப்படச்செய்யும் சந்திரஜோதிக்கு உவமை சொல்லலாம். ஆனால், இன்னும் சிறந்த ஞானமாகிய அவதாரங்களினுடைய ஞானமிருக்கின்றது. அதனை யின்னும் அதிக பிரகாசமுடைய சூரிய ஜோதிக்கே யுவமை கூறல் தகும். அந்த ஜோதி அறையின் உள்ளும் புறம்புமுள்ள எத்தனை நுண்பொருள்களையும் தெளிவாகக் காட்டவல்லதாம். அவதாரத்தினிடத்தில் அஸாத்தியமென்ற பேச்சேகிடையாது. அவதார புருஷர்கள் உலகத்திலுள்ள அதிசாமானிய விஷயங்களை விளக்கிக் காட்டுவது போலவே ஜீவபரவிஷயங்களைப்பற்றிய ஆசங்கைகளை நிவிர்த்திசெய்து தெளிவுதருகின்றனர். மனிதர்க்குப் பிரதானமான நுட்பவிஷயங்களைப் பற்றி யவர்கள் பிரசங்கிக்கும்பொழுது சிறுபிள்ளையிருந்தாலும் அவ்வளவையும் கிரஹிக்கும். பலயுகங்களாகச் சேர்ந்திருக்கும் அஞ்ஞான விருட் குவியலைச் சிதறவடித்தோட்டும் தெய்வஞான சூரியர்களென்று சொல்லத்தக்க மாட்சியுடையவர்கள் அவ்வவதார புருஷர்கள். கடைசியாக, சந்திர ஜோதியும் சூரிய ஜோதியுங் கலந்தாகுந் தன்மையினாலே சந்திர சூரிய ஜோதியென்று சொல்லத்தகும் அபூர்வக் கலப்புஜ்ஜோதியொன்றுண்டு. பக்திஞானம் என்னும் இரண்டும் ஒருங்கேயுடைய சைதன்ய தேவராதி யவதார புருஷர்களினுடைய அபூர்வ ஞானத்திற்கு இதனை யுவமைப்படுத்துக் கூறலாம். அது ஏககாலத்தில் சூரிய சந்திரர், ஆகாசத்திற் றோன்றினாற்போலொத்த தன்மையுடையது. இவ்விதமாக, பிரகிருதியில் சூரிய சந்திரர் சேர்க்கை எத்துணை யபூர்வமோ, அத்துணை யபூர்வம் பக்தியும் ஞானமும் ஒரேமனிதனிடத்துக் காணப்படுகை என்றறியற்பாலது.

8. உலக விஷயங்களில் அழுந்திய மனிதன் தெய்வ ஞானத்தை யடைதல் கூடாது. தெய்வதரிசனம் அவனுக்குக் கிடையாது. கலங்கின ஜலத்தில் சூரியனாவது சுற்றிலுமுள்ள எந்தப்பொருளாவது பிரதிபிம்பிக்குமா? ஆனால் இதற்கு எதாவது பரிகாரமுண்டா? லௌகிகனுக்கு ஈடேற்றமென்பதில்லையோ? என்றால், உண்டு. கலங்கினஜலத்தில், சீனக்காரம்போன்ற சுத்திகரிக்கும் வஸ்து வொன்றையிட்டால், ஜலம் சுத்தமடையும்; அசுத்தங்களெல்லாம் பாத்திரத்தினடியிற் போய்த்தங்கும். விவேகமும் வைராக்கிய

மும் சுத்தீகரிக்கும் கருவிகள். இவ்விரண்டையும் உபயோகித்து லௌகிகன் சுத்த புருஷனாகிறான்.

9. **சாதந நிலைகள் :—**

க. சாதுசங்கம், அதாவது நல்லோர் கூட்டுறவு.

உ. சிரத்தை, அதாவது ஆத்மபரசம்பந்தமான பொருள்களிடத்து லக்ஷியம்.

ரு. நிஷ்டை, அதாவது தான்குறித்த பொருளிடத்து மனத்தைச்செலுத்தி அங்கே அதனை இடையறாது நிறுத்துகை.

குறித்தபொருள், ஒருவனுடைய குருவாயிருந்தாலு மிருக்கலாம், நிர்க்குண தெய்வமாயிருந்தாலு மிருக்கலாம். அல்லது சகுண ஈசுவரனாயும் அவ்வீசுவரனது அநந்த தோற்றங்களிலொன்றாயும் இருப்பினுமிருக்கும். அன்றி ஒருவனது குலதேவதையாயிருந்தாலு மிருக்கும். வைஷ்ணவர்கள், தங்கள் நிஷ்டைக்கு உரிமைப் பொருளாக விஷ்ணு அல்லது ஸ்ரீ கிருஷ்ணனைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். சாக்தர்கள், காளி, துர்க்கை,என்று பலபேதப்படும் சக்தி (லோக மாதா) யைத் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

ச, பாவநிலை, அதாவது ஈசுவரனென் றெண்ணிய வளவில் வாக்கு மன மிரண்டு மடங்குகை.

ரு. மகாபாவநிலை; பாவம் அதிகரித்தபொழுது, அதாவது ஈசுவரனிடத்து மனவொருமைப்பாடு உச்சநிலையை யடையும்பொழுது, மகாபாவம் பிறந்ததென்று சொல்லத்தகும். பைத்தியகாரனைப்போலச் சிலவேளை சிரிக்கையும் சிலவேளை அழுகையும் பக்தனிடத்துக் காணப்படும். அவனுக்குத் தன் சரீரத்திலுள்ள சுதந்திரமெல்லாம் மறைந்துபோகின்றது. இந்நிலை ஜீவர்களால், அதாவது சரீரவிச்சையைக்களையும் வன்மைபெறாத சாமானிய மாந்தர்களால் அடையப்படுவதன்று. மஹாபுருஷர்களுக்கே அது ஸாத்தியமாம். மாந்தர்களது ஈடேற்றத்திற்காக உலகில் வந்துதோன்றும் அவதாரங்களே மஹாபுருஷர்களாம்.

சு. பிரேமையும் மஹாபாவமும் ஒன்றற்கொன்று துணையாயிருக்கின்றன. பிரேமை யென்பது ஈசுவரனிடத்தில் வைக்கப்படும் உழுவலன்பு. கிரமமாகப் பார்த்தால் ஞானமார்க்கத்தில் உயர்ந்தநிலை பிரேமையேயாகும். இந்நிலையின் லக்ஷணங்கள் இரண்டு. ஒன்று, இவ்வுலகத்தை மறந்துவிடுதல்; மற்றொன்று, தன்னை (சரீரத்தையும் உள்ளிட்டு) மறந்துவிடுதல். இந்நிலையை அடைந்திருந்த சைதன்யதேவர் ஈசுவரபக்தியில் மூழ்கியிருந்தமையால், பலமுறை தம்மையும் மறந்து தாம் போன இடங்களிவையென அறிய அசக்தராயிருந்தார். ஒருவிசை தம்முன்னே காணப்படும் வனத்

தைக்கண்டு, அவர் 'இது பிருந்தாவனம்' (ஜகநாதம்) என்று சொல்லும்படி யவ்வளவுதூரம் மறந்திருந்தார். பூரியென்னுமூரில் கடலைக்கண்டு அது யமுனையென்று கருதினர். இங்கிலையில், அவர் கடலில் விழுந்துவிடுவார். இரண்டு மூன்று தடவை அவருடைய நண்பர்களும் சீஷர்களும் அவர் போய் விட்டாரென்றே நினைத்தார்கள். இந்நிலைதான் பக்தனை முடிவுநிலைக்கு அதாவது ஈசுவரனிடத்துக் கொண்டுபோகின்றது. பக்தன் கடவுளைத் தரிசிக்கின்றான். வாழ்க்கைப்பயனை யடைகின்றான். தெய்வக்காட்சி யவனுக்குச் சாத்தியமாகின்றது.

10. திடீரென்று ஞானத்தையடைதல் கூடாத காரியம். ஞானமடைதலும் அடையாமையும் காலத்தைப்பொறுத்திருக்கிறது. ஒருவன்மிகக்கொடுமையான ஜ்வரத்தினால் வருந்துகிறானென்றுத்தேசித்துக் கொள்வோம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வைத்தியர் கொயினாவைப்பிரயோகித்தல் அடாது. பிரயோகித்தாலும் அதுபயன்படாதென்று அவர்க்குத்தெரியும். முதலாவது ஜ்வரம்நோயாளியைவிட்டுப்பிரியவேண்டும். அது காலத்தைப்பொறுத்தது. அப்புறந்தான் கொயினா பிரயோஜனந்தரும். சில வேளை கொயினா அல்லது வேறு எந்தமருந்துங் கொடுக்காமலே ஜ்வரம் விட்டுநீங்கினாலும் நீங்கும். இந்த திருஷ்டாந்தத்தை வைத்து ஞானத்தை யடைய விரும்பும் பக்குவியின் றன்மையையுமறிந்து கொள்ளலாம். அவன் உலக வியவகாரங்களில் அழுந்தியிருக்கும்வரை, அவனுக்குச் சமயபோதனைகள் பெரும்பான்மையும் பயன்படாமற் போகின்றன. உலக விஷயாநுபவத்தில் போதுமானகாலம் அவன் மகிழ்கவென்று விட்டுவிடுதல் அத்தியாவசியகம். பிற்பாடு சிறிது சிறிதாக உலகத்திலுள்ள பற்று நீக்கமடையும். அவனுக்குச் சமய போதனை செய்வதற்குத் தக்ககாலம் இதுதான். இதுவரை, எவ்வகைப் போதனைகளும் அவனுக்குப் போதியாமலிருத்தலே நலம். போதித்தால் அவை அவனாலேற்றுக் கொள்ளப் படமாட்டாவென்பது உறுதி. (செங்கல்லும் சுண்ணாம்புங்குழைத்துக் கட்டப்பட்ட) பக்காச்சுவரில் ஆணியறைய நினைத்தால் முடியுமா? சுவரில் ஆணிமுளையழுந்துமுன்பே அது ஒடிந்துபோமென்றலே தகுதி. முதலையை வாளால் வெட்டுதல் எவ்வளவு மூடத்தனம்? வாள்கொஞ்சங் கூடக் காயம் உண்டுபண்ணாதென்பது தீர்ந்தவிஷயம். ஆகையினால் இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் காலத்தைப் பிரதானமாய்க் கவனித்தல்வேண்டும். ஒரு குழந்தை இரவிற் றூங்கப் போகும்பொழுது 'அம்மை, எனக்கு வெளியே போகவேண்டி யிருக்கும்பொழுது என்னை எழுப்பிவிடு' என்று சொல்லிற்று. இது கேட்ட அம்மை 'குழந்தாய்! வெளியே போகவேண்டியிருத்தல் தானே உன்னையெழுப்பிவிடும். இதற்காக நீ என்னிடத்தில் சொல்லவேண்டியதில்லை' என்றாள். ஞானதாகம் அநேகமாய் காலத்தை முன்னிட்டு நடை பெறுகின்றது. குருவெல்லாம் துணைமாத்திரமாயிருக்கிறார்.

11. மாம்பழம் தின்னக்கருதி நாம் ஒரு தோப்பினுட் பிரவேசிப்பதாக எண்ணிக்கொள்வோம். அநேக ஆயிரக்கணக்காயிருக்கும் மரங்களை எத்தனையுண்டென்று எண்ணிப்பார்ப்பதும், லக்ஷக்கணக்காயிருக்கும் கிளைகளை இத்தனையிருக்கின்றனவென்று கணித்தறிவதும், கோடிக்கணக்காயிருக்கும் இலைகளைச் சரிபார்த்தறிவதும் அவசியமோ? அவசியமென்று ஒரு மூடனுஞ் சொல்லான். நாம் உடனே வந்தகாரியத்தை முன்னிட்டு மாம்பழம் தின்னப்புகுவோம். அதுபோலக் காலத்தையும் சக்தியையும் வீணாக்குகின்றனவென் றுணராது கடவுளைப்பற்றிய விவகாரங்களிற் புகுந்து சிக்கிக்கொள்ளுதல் மகாமூடத்தனம். இந்தப்பிரகாரமாகக் காலத்தை வியர்த்தமாக்குதலைவிட்டு ஒருவன் உடனே முக்கியமாய்ச் செய்யவேண்டிய கடமை யெதுவென்றால் ஈசுவரபக்தி செய்தலாம்.

12. ஈசுவர தரிசனமென்பது எல்லாருக்கு மெளிதில் விளக்கிக் காட்டப்படுந் திறத்ததன்று. ஆயினும், அது கைகூடிவருங் காலத்துத்தோன்றுங் குறிகளைவைத்து அதனிலைமையைத் தீர்மானிக்கலாம். நாடகங்கள் நடிக்கப்படும் அரங்கிற்கு நீங்கள் போயிருந்திருப்பீர்களே. நடர்கள் வந்து நடிக்கத் தொடங்குமுன் அங்கேயுள்ள ஜனங்கள் ராஜதந்திரம், இல்லறதருமம், சர்க்கார்வேலை முதலியவற்றைக் குறித்துப் படபடப்பாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். திரையைத் தூக்கினவுடனே, மலைகளும், குடில்களும், நதிகளும் காட்சிக்குப் புலப்படுகின்றன. பிற்பாடு சகல சப்தங்களும் அடங்குகின்றன. சம்பாஷணைகளெல்லாம் நிறுத்திவிட்டு ஒவ்வொருவனும் தனக்கு முன்னே காட்டப்படும் காட்சியை ஏகாக்ரசித்தத்தோடு நோக்குகின்றான். ஈசுவரதரிசனம் அநுக்கிரகிக்கப் பெற்றவனுடைய நிலையும் அநேகமாய் இப்படிப்பட்டதுதானென்று சொல்லலாம்.

அனவரதவிநாயகம்பிள்ளை.

## பிரசாகாரக் குறிப்புகள்.

திராவிடபாஷா சங்கம்:—இச்சபையை விருத்திக்குச்கொண்டுவர வேண்டுமென்றும் திராவிடபாஷையை ஆதியிலிருந்த நிலைமையிலேயிருக்கவிடாது நாளுக்குநாள் வளர்த்திக்கொண்டு வரவேண்டுமென்றும் எண்ணி அதற்குத்தகுந்த காரியமும் நாளடைவில் சிறிதுசிறிதாய்ச் செய்து கொண்டு வந்தவர்களுள் தமிழ்பாஷையின்கண் அதிக ஆர்வங்கொண்டு அதுவும் மற்ற பாஷைகளைப்போல் விருத்தியாகிக் கொண்டுபோகவேண்டும் என்னும் எண்ணங்கொண்டு சென்ற சிலவருஷமாக அதற்குரிய நடவடிக்கை நடத்திக்கொண்டு வந்தவர்களுள் முக்கியமானவர்களில் ம-ா-ா-ஸ்ரீ, விளாங்குப்பும் தாதாசாரி சேஷாத்திரி யாச்சாரியா ரென்பவரும் ஒருவர். இவர் இச்சபையை விருத்திக்குக் கொண்டுவருவதற்குத் தன்னாலியன்ற வளவு வேண்டிய